No.

MADR

ஸ்ரீ:

லோகமித்ரன்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."———திருக்குறள்.

வா. 2. ஆநந்த ௵ சித்திரை ௴ ௧௨ ந. 1.

உள்ளுறை.

நமது குறிப்புகள். ... ... 1.

தமிழும் ஸம்ஸ்க்ருதக் கலப்பும். ... 3.

ஸ்ரீமான் மோகனதாஸ் காந்தி (ஜீவியசரிதம்) 9.

தென்னாபிரிக்கா மானக்கேடான சட்டங்கள் 36.

பெண்கள் பக்கம்—இந்தியஸ்திரீகள் II. 41.

சிறுவர்க்கானபக்கங்கள்—அதிசயவிஷயங்கள் 45.

இந்தியர்களின் உண்மைத்தன்மை ... 47.

ஸ்ரீ கம்பராமாயணம்—முகவுரை ... 53.

பத்திராதிபர், M. V. கோவிந்தராஜய்யங்கார்.

நாமக்கல்.

யூனியன் அச்சியந்திரசாலை.

ரூ 3.] **1914.** [தபாற்கூலி அணா 4.

னிப்பிரதி ஒன்றுக்கு அணா 6.

ஸ்ரீ:

லோகமித்ரன்.

இப்பெயர்கொண்ட மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை ஒன்று 1913 ம் வருஷம்முதல் வெளியாகிறது. இதனுள் லௌகிக வைதிக விஷயங்கள், புராதன நவீன சாஸ்திரவிஷயங்கள், ராஜீய தேசியவிஷயங்கள், இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகள் இவைகள் போன்ற இன்னும் அநேகவிஷயங்கள் தகுந்தபண்டிதர்களால் எழுதப்பட்டு வருகின்றன.

56 பக்கங்கள் உடையதாக உயர்ந்த கடிதத்தில் பதிப்பிக்கப்படும்.

வருஷசந்தா தபால் கூலியுள்பட ரூ. 3—4—0

விளம்பர விகிதம்.

பக்கம்ஒன்றுக்கு மாதம்ஒன்றுக்கு ரூ. **1—8—0**

குறைந்தபக்கங்கட்கு கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டுகிறோ

லோகமித்ரன் ஆபீஸ்
நாமக்கல்.

M. V. கோவிந்தராஜப்பங்கார்,
எடிடர்.

பத்திரிகைக்கு முன்பணம் கோடுத்து உதவியவர்கள்.

பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்கள், நாமக்கல் ரூ 35.

மகா-ள-ள-ஸ்ரீ மகமது ஹனீப் சாஹிப் அவர்கள், நாமக்கல். ரூ 2

ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறைமடம் பண்டாரஸந்நிதியவர்கள், திருவிடமருதூர். ரூ 30.

ஸ்ரீமான் கோபாலசாமி ரெகுநாத ராஜாளியார் அவர்கள், ஹரித்வாரமங்கலம். ரூ 25.

MAD

ஸ்ரீ:

லோகமித்ரன்.

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."——திருக்குறள்.

வா. 2. ஆநந்த ௵ சித்திரை ௴ ௧௨. நெ. 1.

நமது குறிப்புகள்.

டாக்டர் அப்துல் ரஹ்மான் என்னும் ஒரு மகம்மதிய கனவானை, தென்னாப்பிரிக்காவில் கேப்காலனி பார்லிமெண்டில் ஒரு மெம்பராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பது தெரிந்து கவும் சந்தோஷம் அடைகிறோம். தென்னாபிரிக்காவில் இந்தியர் ஷயமாக நடந்து கொண்டிருக்கும் இந்தக்கலக்கமான சமயத்திலே அதே நாட்டில், ஒரு இந்தியர் பார்லிமெண்டு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்தியாவின் பெருமையை உணர்த்துகின்றது.

தென்னாப்பிரிக்கா இந்தியரின் கஷ்டநிவர்த்திக்காக நாமக்கல் டவுன் ஹாலில், ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ துரைசாமி ரெட்டியார் வர்களது அக்கிராசனாதிபத்தியத்தில் கூடிய ஒரு பெருங்கூட்டத் ன் பயனாகவும், இதே கூட்டத்தார் சமீபகிராமமாகிய காளப்ப நாயக்கன்பட்டியில் கூடிய கூட்டத்தின் பயனாகவும் ரூபாய் 252 (இருநூற்றைம்பத்திரண்டு) வசூல்செய்து மதராஸில் உள்ள ஸங்கத்

துக்கு அனுப்பின விஷயத்தை நமது மித்திரநேயர்களுக்குத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தத் தொகையில் காளப்பநாயக்கன்பட்டி பாலசாமிநாயக்கர் வகையறு ரூபாய் 200ம், நாமக்கல்லில் சில பிரமுகர்கள் ரூபாய் 52ம் ஆகச்சேர்த்து ரூபாய் 252 அனுப்பினார்கள். மகா-ா-ா-ஸ்ரீ ஜமீன்தார் அவர்களிடமிருந்து அவர்களது தனத்தையும் மனத்தையும் உத்தேசித்து அவர்கள் வாக்குத்தத்தம் செய்துள்ள ரூபாய் **100**க்கு மேல் அதிகமாக ஸங்கத்தார் விரும்புகிறார்கள் போலும்.

தென்னிந்தியர்களின் கல்வியபிவ்ருத்தியை யுன்னி ஹரித்வாரமங்கலத்துப் பிரபுவாகிய தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு போர்டு மெம்பர் ஸ்ரீமான் கோபாலசாமி ரேகுனாதராஜாளியார் அவர்கள் பல இடங்களில் ஸங்கங்கள் கூட்டித் தாமே தலைமை பூண்டும், தாமே தனம் உதவியும், தாமே உபந்யாஸங்கள் செய்தும் இந்தியக்கல்வியை அபிவ்ருத்தி செய்வது வியக்கத்தக்கது. கலைமகள் பொன்மகள் இவ்விருவரது அருளையும் ஒருங்கே பெற்ற கனவான்களில் அநேகர் வடநாட்டில் பெருகியிருப்பதுபோல, நம் தென்னாட்டிலும் உள என்பதை இந்தக்கனவான் முன்வந்து காட்டுகிறார். இவர் ஆரியம் ஆங்கிலம் தமிழ் இப்பாஷைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். தமது பெருமையைப்பாராட்டாது குடிகளிடத்தில் கலந்து உறவாடுபவர்கள். படித்தவரை ஆதரிப்பதில் தாமதப்படாத குணமுடையவர்கள். இவர்களை வள்ளல் என்றுசொல்ல எம்மனம் தளராது. வைத்தியசாலை வாசகசாலை கல்விச்சாலை இவற்றைவளர்ப்பதில் முழுநோக்கமுடையவர்கள். அதற்கேற்ப தமது கிராமத்தில் இம்மூன்றுசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பொதுவிஷயங்களுக்குப் பாடு படுவதும் செலவுசெய்வதும் தமதுகடமை யென்பதை யுணர்ந்தவர்கள். இந்தப் பிரபுவைப் போன்ற இன்னும் அநேக பிரபுக்களை நமது தென்னாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

நாடு ஆவணக் காப்பக நூல

தமிழும் ஸம்ஸ்க்ருதக் கலப்பும்.

BY

V. இராமலிங்கம்.

பிரமாதீச வருஷம் ஆனி மாதத்திய செந்தமிழ் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் "தமிழும் ஸம்ஸ்க்ருத உதவியும்" என்ற விஷயதானத்தைத் தமிழ்நேயர்கள் பெரும்பாலரும் கவனித்திருப்பார்களென்று நம்புகின்றோம்.

அதில் அடங்கியிருக்கும் அநேக அருவருப்பான வழுக்களைக் கண்டித்துப்பேசத் தமிழறிஞர்கள் யாரும் முன்வராத விஷயம் பரிதபிக்கத்தக்கதே. படித்தறிந்த பண்டிதர்கள் இது அற்பவிஷயமென்று அவமதித்தனர்போலும்.

அப்படியாயின் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் அவர்கள் தங்கள் கடமையைச் செலுத்தத்தவறினவராவார்கள்.

இந்தியதேசமும் இந்தியபாஷைகளும் பலவிதத்திலும் க்ஷீணமடைந்திருப்பதுபோலவே தமிழும் தமிழ்நாடும் பலவிதத்திலும் க்ஷீணமடைந்திருப்பது இயற்கையே.

ஆனால் இவ்வீனஸ்திதிக்குத் தமிழ்ப்பண்டிதர்கள் தம்மையறிந்தோ அறியாமலோ செய்திருக்கும் குறை மிகுதியும் உண்டு. எப்படியெனில், தமிழையும், தனிமையாய் அதற்குள்ள பெருமை சிறுமைகளையும், ஸம்ஸ்க்ருதத்தோடு ஒத்திட்டுப் பேசும்போதெல்லாம் மிகுதியும் படித்திருக்கும் பண்டிதரிற் பலரும் தமிழின் பெருமை பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதத்தைச் சார்ந்ததென்றே சொல்லுகின்றார்கள். அந்தோ! இது தமிழ்மாதின் தவக்குறைவே!.

இதற்குப் பலகாரணங்களுண்டு. அதில் முக்கிய காரணத்தை மட்டும் சொல்லுவோம்.

என்னவெனில், தமிழையும் ஸம்ஸ்க்ருதத்தையும் தனித் தனியே அவைகளின் பெருமை சிறுமைகளைபுணர்ந்து ஆராய்ச்சி யுடன் படித்த பண்டிதர்கள் வெகு கொஞ்சம். அப்படி இரண்டு பாஷைகளிலும் பரிசயமுள்ளவர்கள் பெரும்பாலும் பிராமணப் பண்டிதர்களே.

இப்பிராம்மணப் பண்டிதர்கள் தங்களை ஆரியரென்று சொல் லிக்கொள்ளுவதில் ஏதோ உயர்ச்சியிருக்கிறதென்றும், த்ராவிடர் என்று சொல்லிக்கொள்ளுவதில் ஏதோ தாழ்ச்சியிருக்கிறதென்றும் மயங்கித் தம்மை ஆரியரென்றே அகமகிழ்ந்திருக்கின்றனர். (அது குற்றமென்று நாம்சொல்லவரவில்லை.)

ஆகலால், இவர்களுக்கு ஆரியபாஷையென்று சொல்லப்படும் ஸம்ஸ்க்ருதத்தில் பரிவும், த்ராவிட பாஷையென்று சொல்லப்படும் தமிழில் துவேஷமும் தம்மை யறியாமலேயே ஏற்படுகின்றது. ஆகவே இவர்கள் எழுதும்போதும் பேசும்போதும் ஸம்ஸ்க்ரு தத்தை உயர்த்தியும் தமிழைத்தாழ்த்தியும் சொல்லுவது ஸகஜமாகி விட்டது.

இப்பிராம்மணரல்லாத மற்றத் தமிழ்ப்பண்டிதர்களுள் பெரும் பாலருக்கும் ஸம்ஸ்க்ருதப் பயிற்சியின்மையால் இவ்விருபாஷைகளை யும் ஒத்திட்டுப்பார்த்து ஆராய்ந்துபேச ஆதாரமில்லாமற்போய்வி ட்டது. ஆதலால் முற்கூறிய வகுப்பார் தமிழைத் தாழ்த்திப்பேசும் போது, அதை மறுத்துப்பேசச் சக்தியற்றவராய் மயங்கிக்கிடக்கின் றனர். அன்றியும் அவர்கள் சொல்லுவதற்குத் தலையசைக்கவும் நேர்ந்துவிட்டது.

கவனிக்கவேண்டியது. ஸம்ஸ்க்ருதத்தையாவது அதையு ணர்ந்த பிராமணர்களையாவது நாம் இழித்துப்பேசுவதாகஎந்தவிதத் திலும் துவேஷங்கொள்ளக் கூடாதென்று வேண்டிக்கொள்ளுகி றோம். ஸம்ஸ்க்ருத பாஷையின் தனிமையையும் அளவிடக்கூடாத அதன் பெருமையையும் எவரும் தடுக்கமுடியாது. அன்றியும் தமிழில் அநேக ஸம்ஸ்க்ருதவார்த்தைகளும் தொடர்களும் எண்

ணங்களும் கலந்திருக்கிறதென்பதையும் நாம் தடுத்துபேசமுடியாது. உலகம் வ்ருத்தியடைய அடைய பலஜாதியாரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவம் பாராட்டிக் கலக்கும்போது பாஷைகளும் ஒன்றுக்கொன்று கலந்துபோகுமென்பது தடைசொல்லமுடியாத சித்தாந்தம்.

ஆனால், 'தமிழ்' ஸம்ஸ்க்ருத வார்த்தையினின்றும் வந்தது என்றதுபோன்ற வழுக்களை, இல்லாதகாரணங்களை, உற்பத்திசெய்து ருசுப்படுத்துவதனால் நாம் அடையும் பயனென்ன என்பதே நமது விசாரணை.

ஆனால், அதனால் நாம் அடையும் கெடுதியென்ன 'தமிழ்' ஸம்ஸ்க்ருதத்தினின்றும் வந்தது என்று ஒத்துக்கொண்டால் என்ன கெடுதல் என்று சிலர் கேட்கலாம். அப்படி ஒத்துக்கொண்டால் ஏதோ கெடுதி வந்துவிடுமென்று நாம் திடமென்று சொல்ல முடியாவிட்டாலும், பொய்யான காரணங்களைச்சொல்லி உலகத்தை நம்பும்படிக்குப் பாசாங்குகாட்டி உலக அறிவைத்தப்பான வழியில் திருப்பியதாகக்குற்றம் ஏற்படுமானதால், அப்படி ஒத்துக்கொள்ளுவது அறிவின் விருத்திக்கு ஹானியாகும்.

உதாரணமாக, ஒரு காக்கைக்கூட்டினின்றும் வெளிவந்த ஒரு குயிற்குஞ்சை, அது காக்கையின் முட்டையினின்றுதான் வந்திருக்கவேண்டுமென்று ருசுப்படுத்தினால், அதனால் அந்தக்குயிற்குஞ்சு இறந்துபோகப்போகிறதில்லை. அன்றி, அதன் வாழ்க்கைக்கு அதனாலேயே ஒரு குறையும் ஏற்படாது. ஆனால் குயிற்குஞ்சு காக்கையின் முட்டையினின்றும் வந்ததென்ற தப்பான அறிவை உலகம் அடைந்த குறையேற்படுமானதால், அது உலக அறிவின் பொக்கிஷத்திற்கு அழுகிய பதார்த்தமாகும்.

ஆதலால், சேந்தமிழில் வெளிவந்திருக்கும் விஷயத்திலுள்ள குற்றங்களைச் சுட்டிக்காட்டவேண்டியது நமது கடமையே. "தமிழும் ஸம்ஸ்க்ருத உதவியும்" என்ற வியாசத்தை எழுதியவர் நாம் முன்னாற்சொன்ன பிராமணப் பண்டிதரிற் சேர்ந்தவரென்று பல

காரணங்களாலும் விளங்குகின்றது. தமிழின்பெருமை பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதத்தைச் சார்ந்தது என்ற நிச்சயத்துடனேயே இவர் வியாஸம் எழுதியிருக்கிறதாகவும் தெரியக்கிடக்கின்றது.

உண்மையான கவித்துவமில்லாத ஒருவர், கவிபாட விரும்பி யாப்பிலணக்கத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தான் குறித்த பொருள் வருவதற்கு எழுத்துக்களை எண்ணியெண்ணி வார்த்தைகளைப் பொருத்துவதுபோல், இவர் தாம் எடுத்துக்கொண்ட சில பாரபட்சமான அபிப்பிராயங்களை நிரூபிக்கவேண்டுமென்றே பாடுபட்டிருக்கின்றார். அதாவது தமிழின்பெருமை ஸம்ஸ்க்ருதத்தை ஒட்டியதென்பதும், 'தமிழ்' என்றபதம் ஒரு ஸம்ஸ்க்ருதவார்த்தையின் மரூஉ என்பதுமான இவ்விரண்டு எண்ணங்களையும் நிரூபிக்கவேண்டுமென்ற ஒரு நோக்கத்தை உறுதிகொண்டு அதற்கென்று ஆதாரங்காட்டுவதாக ஆராய்ச்சி செய்திருக்கின்றார். சுருங்கச்சொல்லின், இவருடைய ஆராய்ச்சியால் 'தமிழ்' ஸம்ஸ்க்ருத வார்த்தையினின்றும் வந்திருக்கவேண்டுமென்று அறியவந்தவரல்லர்; ஆனால், 'தமிழ்' வடமொழியினின்றும் வந்ததென்று தீர்மானிக்கவேண்டுமென்றே ஆராய்ந்தவரென்று நாம் கொள்கிறோம். இதைப்பின்னால் விளக்குவோம்.

இனி இவர் எழுதியிருக்கும் விஷயங்களை விசாரிப்போம்.

தமிழின் தனிமையையும் அதன் இனிமையையும் தடுத்துப் பேசவேண்டுமென்றே வியாசமெழுத ஆரம்பித்த இவர், வியாச ஆரம்பத்தில் (பிரமாதீச-ஹு ஆனி-மீ 255-ம் பக்கம்) ஆரியர்களின் உற்பத்தியைப் பற்றியும் அவர்கள் உலகமுழுதும் பரவியதைப்பற்றியும் பேசுகின்றார். அதைப்பற்றிப் பேசக்கூடாதென்று சொல்லவில்லை. ஆனால் இவர் ஆரிய உற்பத்தியை விரித்து விரித்துப் பேசுவதனின்றும் அடையும் ஆதாரம், எடுத்துக்கொண்ட காரியத்துக்குப் பொருத்தமற்றதாகவிருப்பதால், இது ஒரு ஜாலவித்தைக்காரன் தான் குறிப்பிட்ட வித்தையைச் செய்துகாட்டுமுன், அதன் சூழ்ச்சியைப் பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளாதபடி அவர்களுடைய கவனத்தை இழுக்கவெவ்வேறு விஷயங்களைப்பற்றி விரிப்பதுபோலிருக்கின்றது.

இதற்கடுத்தபக்கத்தில் (256) கடைசிபாராவில், சொல்லியிருக்கும் விஷயங்கள் முழுதும் ஆட்சேபணைக் குட்பட்டனவாயிருக்க, இவர் "பிற்கூறிய சிலவற்றைத்தவிர பெரும்பான்மை நிராட்சேபணையாய் யாராலும் அங்கீகரிக்கப்பட்ட ஸித்தாந்தங்களன்று" என்று எழுதுகிறார். அந்த 'பிற்கூறிய சில' எவை என்பதை நிச்சயமாகச் சொல்லவில்லை. பிற்கூறியசிலவாவன "கடைசியாக ஆரியர்களுடைய அமிதபலத்தால், பூர்வகுடிகள் தென்திசை ஓடிச் சென்றனரென்றும், அவ்வாறு சென்றவர்களில் ஒரு ஜாதியார் முன் கூறிய துரேனியர் என்றும், இவர்கள் தக்ஷிண இந்தியாவில் குடியேறினதும் அவர்கள் த்ராவிடர் என்று வழங்கப்பட்டார்களென்றும் ஊகிக்கப்படுகிறது" என்றிருக்கிறது.

இவருடைய வியாசம் முழுவதற்கும் 'த்ராவிடர்' என்ற பதம் முக்ய ஆதாரமாகயிருப்பதால், தென்திசையோடிய பூர்வகுடிகள் 'த்ராவிடர்' என்று வழங்கப்பட்டார்களென்பது மட்டும் நிராட்சேபணையாக, தான் ஊகித்துக்கொள்வது மட்டுமல்லாமல் படிப்பவர்களையும் ஊகிக்கச் சொல்லுகிறார். வடஇந்தியாவின பூர்வகுடிகள் ஆரியரால் துரத்தப்பட்டுத் தென்திசையடைந்தபின், அவர்கள் த்ராவிடரானார்களென்பது ஒருகாலத்தில் ஊகிக்கப்பட்ட ஸித்தாந்தமானாலும், நவீன ஆராய்ச்சிகளால் அது முற்றும் தவறென்றும், மத்திய ஆசியாவினின்றும் ஆரியர்களென்று ஊகிக்கப்பட்ட ஒரு விசேஷ ஜாதியார் இந்தியாவுக்கு வந்ததாக ஊகிக்கப்பட்ட காலத்திற்கு வெகு காலங்களுக்கு முன்னமேயே, தென்னிந்தியாவில் அனேக ராஜ்யங்கள் விருத்தியடைந்து த்ராவிடர்கள் என்று ஊகிக்கப்பட்டஜாதியார் வெகு நாகரீகத்தோடு வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் நிச்சயமாகச் சொல்லமுடியுமென்று தற்காலத்திய மனித வர்க்க சாஸ்த்ரஞர்கள் மன்றாடுகின்றனர். (த்ராவிடர்களைப்பற்றி ஓர் தனி வியாசம் இன்னொரு சஞ்சிகையில் எழுதுவோம்.)

அது எவ்வாறாயினும் ஊகிக்கப்பட்ட ஸித்தாந்தங்களினின்றும் நிச்சயம் பேசுவது ஊகிப்பதற்கு மட்டும் அழகாக இருக்குமேயொழிய உண்மைக்கு உறுதியாகாது.

இதற்குப் பின்னால்வரும் சில பாராக்களில் (பக்கம் 257) முன்னால் ஊகித்ததை ரத்து செய்கிறார். அதுமட்டுமல்லாமல் ஆரியரும் த்ராவிடரும் இந்திய தேசத்தவர்களா அந்நிய தேசத்திலிருந்து வந்தவர்களா எக்காலத்தில் எப்படி வந்தார்கள் என்று நிரூபிக்கப் போதுமான ஆதாரமில்லையென்று ஒத்துக்கொள்ளுகிறார். இது முற்றும் உண்மையே. ஆனால், இவர் முன்னால், "பிற்கூறிய சில நிராட்சேபணையானவை" யென்றதன் அர்த்தமென்ன?

இதற்கடுத்த பாராவில் "நிரூபிக்கவியலாத இம்மகாவிசாரணையில் (ஆரியரும், த்ராவிடரும் எங்கிருந்து வந்தார்களென்பது) இந்த நிலைமையில் தலையிட்டுக்கொள்ளாமல் நிராட்சேபணையான ஒரு நிலைமையிலிருந்து பிற்பட்ட சங்கதிகளை விசாரிப்போம். (1) அதாவது முன் ஒரு காலத்தில் உத்தரஇந்தியாவில் ஆரியவர்த்தமென்ற தேசத்திலே ஆரியர் என்ற ஒரு ஜாதியார் ஸம்ஸ்க்ருத பாஷையை வழங்கிக்கொண்டு வசித்துவந்தனர். (2) தக்ஷிண இந்தியாவில் த்ராவிடர் என்ற ஒரு ஜாதியார் த்ராவிடம் என்ற ஒரு பாஷையை வழங்கிக்கொண்டு வசித்துவந்தார்கள்" என்று எழுதுகிறார்.

இவ்விரண்டு கோட்பாடுகளும் நிராட்சேபணையானவை என்று தாம் நினைத்துக் கொள்ளுவதுமல்லாமல் படிப்பவர்களையும் நினைத்துக்கொள்ளும்படி உச்சாடனம் செய்கிறார். முதலாவது சொன்ன "ஆரியவர்த்தமென்ற தேசத்திலே ஆரியர்கள் என்ற ஜாதியார் ஸம்ஸ்க்ருதபாஷையை வழங்கிக்கொண்டு வந்தார்க"ளென்பது பலவிதத்திலும் நிராக்ஷேபணையானதே. ஏனெனில் சுய ஆதாரங்களாலும் அந்நிய ஆதாரங்களாலும் இதை நிரூபிக்கலாம்.

(தொடரும்.)

ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்த்காந்தி.

"தருமத்தையும் காருண்யத்தையும் தழுவி நின்று சிலுவையில் அறைபட்டுத் துயருழந்த இயேசு கிறிஸ்துவைப்போலவே நான் மிஸ்டர் காந்தியை நினைக்கிறேன்."

ரேவரெண்ட் டாக்டர் வோயிட்ஹெட்,

15—2—13 லார்டு பிஷப், சென்னை.

"தென் ஆப்பிரிக்காவில் வாழும் மனிதர்கள் எல்லாரிலும் உத்தம குணமுடையவர் யார்? என்று அந்த ஆப்பிரிக்காவிலுள்ள யாரைக் கேட்டாலும், மிஸ்டர் காந்தியைத் தவிர வேறு யாருமில்லையென்று சொல்லுவார்கள்."

10—1—1910. டிரான்ஸ்வால் லீடர்.

"மிஸ்டர் காந்தி உத்தமமான குணங்கள் நிறைந்தவர் என்று நான் அறிவேன்."

லார்டு க்ரூ.

"உத்தம குணங்கள் நிறைந்த மிஸ்டர் காந்தியை சாக்ஷி சொல்வதற்கென்று கையில் விலங்கு பூட்டித் தெருவோடு அழைத்துப்போவது மிகவும் பரிதாபமான செயல்."

நேடால் மெர்குறி.

மித்திர நேயர்களே!

முதலில் சென்னை லார்டு பிஷப் அவரை "அவதார புருஷரென்று சொன்னதற்கும், டிரான்ஸ்வால் லீடர் அவரை "மனிதரில் உயர்ந்தவர் என்று சொன்னதற்கும், இந்திய மந்திரியாகிய லார்டு க்ரு அவரை "உத்தம குணங்கள் நிறைந்தவர்" என்று சொன்னதற்கும் வேறுபாடாக நேடால் மேற்குறி என்னும் பத்திரிகை "அந்தக்காந்தி என்பவர் கைகளுக்கு விலங்கிடப்பட்டுத் தெருவோடு அழைத்துச் செல்லப்பட்டார்" என்று சொல்வதைப் பார்த்தால் அவ்வளவு உத்தமகுணம் பொருந்திய மஹான் ஊர்நகைக்கக் கைவிலங்கோடு தெருவில் செல்ல என்ன குற்றம் செய்தார் என்று சங்கிக்கவேண்டிவரும்.

ஸகோதரர்களே!

" தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் —"

" கைம்மாறு வேண்டாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மாலிய லுதவி தாஞ்செய்வர்—"

" தம்முயிர்க் குறுதியெண்ணார் தலைமகன் வெகுண்டபோதும்
வெம்மையைத்தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையு முணரவல்லார் ஒருமையே மொழியும் நீரார்."

" உற்றதுகண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின்வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரியநூலுங்
கற்றவர் மானநோக்கிற் கவரிமா வனைய நீரார்."

என்று நம்பெரியோர் கூறியுள்ள பொய்யாமொழிகட்கு இம்மஹானே ப்ரத்தியக்ஷ சாக்ஷியாகவுள்ளார். இவரது கொள்கை யென்னவென்றால் "தர்மமே ஜயம், ஸத்யமே வ்ரதம்" என்பதுதான். தேஹபலத்தையும் ஆயுதபலங்களையும் சேனாபலத்தையும் அற்பவலியாக வெண்ணித் தமது மனோபலம் ஒன்றையே கொண்டு நிற்பவர்.

தாம் பாரிஸ்டர் பட்டம் பெற்றிருப்பினும் அதற்குரிய ஆடைகளையுடுத்துக் கோர்ட்டுகளில் நியாயத்தை வாக்கால் வாதிப்பதை விடுத்து, தம் முக்கரணங்களும் ஒரேவழியான நல்வழியிற் செல்வதையுணர்த்துபவர்போல, ஒரு அரசாங்கத்தின் கொடுங்கோன்மையை நீக்குவதற்கும் ஜனங்களுக்கு சவுக்யமும் கவுரவமும் தேடிக்கொடுப்பதற்கும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும், சூட்டைத்தணிக்க முடியாததோர் சிறிய குல்லாவையும் இத்தனையாவது நம்பர்க்கைதியிவர் என்பதைக் காட்டக்கூடிய ஒரு சீட்டையும், குடுகுடுப்பாண்டிபோல் தைத்துப்போடப்பட்டுள்ள ஒரு சட்டையையும், கைதியிவர் என்று குறிப்பிடக்கூடிய முழங்கால் அளவுள்ள கால்சட்டையையும், தரித்துப் பகலெல்லாம் கப்பிக்கல்லுடைப்பதும் மண்ணை வெட்டிச்சுமப்பதும் ஆகிய முதலிய கடின வேலைகளைச் செய்து அதனால் கைகள் வீங்கிக் கொப்புளம் உண்டானபோதும், இது தான் உண்மையான கடமை யென்றுக் கொஞ்சமேனும் தேகத்தினுடைய சிரமத்தை எண்ணாதவராகவே, இப்போது தென்னாப்பிரிக்கா சிறையில் இருந்து மனோபலத்தால் வாதஞ்செய்துகொண்டிருக்கிறார்.

இந்திய ஸஹோதரர்களே! இவருக்கு ஜாதி மதம் முதலிய வித்யாஸம் இல்லை. தர்மவழியில் செல்லும் யாவரும் இவருக்கு பந்துவேயாவர். இவர் சிறையில் இருக்கையில் 'இவருக்குச் சொந்த ஆகாரம் கொடுக்கலாம்' என்று உத்தரவானபோது இவரது நண்பர்களில் ஒருவராகிய காலன்பேக் என்பவர் தாம் ஆகாரம் கொண்டு போய்க் கொடுத்தார்.

இவர் இப்போது நான்காம் முறையாகச் சிறையில் அடைபட்டிருக்கிறார். சின்னாளாக விசாரணைசெய்வதற்கென்று வெளியே விடப்பட்டவராயினும், தம்மோடு கூடவே மானங்காத்தலுக்காகச்சிறையில் அடைபட்டிருக்கும் ஏழைகளாகிய சுமார் 30,000 இந்தியர்களும் சிறைவிட்டு வெளியே வரும்வரையில் அவர்கள் உடுக்கும் உடையும் அவர் உண்ணும் உணவில் பாதியும் தாம் தமக்கு ஆகாரமும் ஆடையுமென்று மனவுறுதியோடு இருப்பவர்.

நண்பர்களே! இச்செய்கையால் இவர், ஸ்ரீராமபிரானுக்காகத் தமது ஸுகங்களை யொழித்து நின்ற பரதாழ்வானல்லவா? சத்தியத்துக்கு ஹரிச்சந்திரனும் பொறுமைக்குப் பாண்டவரும் தர்மத்துக்கு ஸ்ரீராமனும் ஜனங்களை நல்வழி திருத்துவதற்கு மகம்மதுநபியும் ஏழைகளை வாழ்விப்பதற்கு ஏசுகிறிஸ்துவும் படாதபாடுகளைப்பட்டிருக்கிறார்களென்று படித்திருக்கிறோமே. இவரது செயல்களைக் கவனித்தால் அந்த மஹான்களனைவரும் ஒருருக்கொண்டு வந்தனரோ என்று எண்ணும்படியாகவே இருக்கிறது. தமக்கு எந்தவிதசுகமும் கவுரவமும் ஏவலாட்களும் இருப்பினும், ஜனங்கள்படும் அநியாயகஷ்டங்களைச் சகிக்காமல் எவ்வளவோ முயற்சி செய்தும் சிபார்சுகள் தேடியும் மோசவாக்குகட்குப் பொறுத்திருந்தும் அந்தத் தென்னாப்பிரிக்கா கொடுங்கோலரசு வழிக்கு வராதது கண்டு, ஆத்மபலத்தின் உண்மையை யறிந்தவராதலால், தாமும் தமது ஜனங்களோடு உளம்பொறுத்தல் அதாவது எதிர்க்காமல் எதிர்த்தல் என்னும் வழியை மேற்கொண்டு வாதிக்கிறார். எதிர்க்காமல் எதிர்த்தலாவது தமது பகைவர் தம்மை எந்தவிதமான துயரத்துக்காளாக்கினாலும் அவரது கல்போன்ற மனமும் கரையும்படி அக்கொடுமைகளை மனதோடு ஏற்றுக்கொண்டு, தம்மொருமார்க்கமாகிய தர்மமார்க்கமே குறியாகவைத்துச் சகிப்பது. பகைவர்க்கு வாயாலேனும் மனத்தாலேனும் தர்மத்துக்கு விரோதமாகத் தீங்கு நினையாமல் இருப்பது. இதனை ஸுதன்வா ப்ரஹ்லாதன் டால்ஸ்டாய் முதலிய பெரியோர்கள் நடத்திக் காண்பித்திருக்கிறார்கள்.

இம்மஹானே திர்க்காலோசனையில் தீரர். இவரே மனோபலத்தால் எதிர்க்காமல் எதிர்த்துப் போர்செய்யும் வீரர். இவரே தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் இதர உயிர்களுக்கென்று ஒப்பித்த மஹான். இவரே தமது புலன்களை வென்ற யோகி. இவரே தேசத்துக்காகப் பாடுபடும் பக்தர். இவரே தமது தாயாகிய இந்தியமாதாவுக்குப் புகழைத்தேடிய ஸத்புத்திரர்.

மித்திரர்கள் இம்மஹானது சரித்திரத்தைக் கேட்க விரும்புவார்களாதலால் அதனை இந்தச் சஞ்சிகையில் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

பிறப்பு வளர்ப்பு முதலியன.

1869-ம் வருஷம் அக்டோபர்-மீ 2-உ பம்பாயுக்கு வடக்கிலுள்ள கத்தியவார் என்னும் நாட்டில் வணிகர் குலத்தில் நமது ஸ்ரீமான் மோகனதாஸ் காந்தி பிறந்தார். இவருடைய முன்னோர்கள், அந்தமாகாணத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்னும் சிற்றரசுக்கு மந்திரிகளாக இருந்தவர்கள். இவருடைய தகப்பனாரும் அதே நாட்டில் 25-வருஷகாலங்கள் மந்திரியாக இருந்து ராஜகோட் முதலிய ஸமஸ்தானங்களிலும் திவானாக இருந்திருக்கிறார். அவர் திவானாக இருந்தது மாத்திரமல்லாமல் அந்நாட்டில் கூடியிருந்த ராஜஸ்தான சபைக்கு முக்ய அங்கத்தினராகவும் இருந்தபடியால், அந்நாட்டு ஜனங்களில் அவரை யறியாதாரும் அன்பு காட்டாதாரும் இல்லை. இவருடைய தாயும் மதாசாரங்களில் சிறந்த ஒழுக்கமுடையவளாயிருந்தபடியால், நமது ஸ்ரீமான் காந்திக்கு இருதிறத்து நல்லொழுக்கங்களும் கூடிப் பிரகாசித்தன. நமது கதாநாயகர் அந்தக்குடும்பத்துக்குக் கடைசிப்பிள்ளையாக இருந்தபடியால் தமது தாயினுடைய ஒழுக்கங்களால் சீர்திருத்தப்பட்டு, இப்போது உலகத்தார் எல்லாராலும் கொண்டாடத்தக்க மனோபலம் உடையவராக விளங்குகிறார். இவருக்குக் கத்தியவாரில் படிப்பு முடிந்தவுடன் லண்டனுக்குப் போய்ப் படிக்கப் பிரியம் உண்டாயிற்று. தமது மாதாவின் ஸம்மதத்தைப் பெறுவது மிகுந்த கஷ்டத்துக்கு வந்தது. கடைசியில், லண்டனில் போய்த்துராசாரங்களில் பழகுவதில்லை யென்று வாக்குக் கொடுத்த பிறகு, அந்த அம்மாளின் ஸம்மதத்தின்மேல் லண்டன் நகரத்துக்குச் சென்றுப் படித்து, தமது ஒழுக்கங்கெடாமல் இருந்து, பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறிப், பிறகு பாம்பே ஹைகோர்ட்டில் ஒரு அட்வகேட்டாக நியமனம் பெற்றுத்தமது நியாயவாதித்தொழிலையாரம்பித்தார்.

தென்னுப்பிரிக்காவுக்கு வந்தது.

1893-ம் வருஷத்தில் ஒரு சிக்கலான இந்தியக்கேசின் நிமித்தம் தென்னுப்பிரிக்காவிலுள்ள ட்ரான்ஸ்வால் நேடால் முதலிய இடங்கட்கு வக்கீலாகப்போகும்படி நேர்ந்தது. இவர் டர்பன் நகரம் போய் இறங்கினமுதல் தமது அனுபவத்தால் தம்மையும் இந்தியர்களையும் அங்குள்ள வெள்ளைக்காரர்கள் தாழ்ந்த மக்களாக மதித்து அவமானப்படுத்துவதையுணர்ந்து மனக்கொதிப்படைந்தார். அந்த நேடால் ஹைகோர்ட்டில் தம்மை ஒரு அட்வகேட்டாக எடுத்துக் கொள்ளும்படி மனுச்செய்துகொண்டார். அந்த மனுவை ரத்து செய்துவிடும்படியும் வெள்ளைக்காரர் அல்லாதவருக்கு வக்கில் உத்தியோகம் இந்த அரசாங்கத்தார் கொடுக்கக்கூடாதென்றும், அங்குள்ள வக்கில் கூட்டத்தார் ஆக்ஷேபித்தார்கள் என்றாலும் அங்குள்ள ஸுப்ரீம் கவர்ன்மெண்டார் ஸ்ரீமான் காந்தி அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப் பெற்றார்.

1894-ம் வருஷம், அந்த நேடால் இந்தியர்களது பிரார்த்தனைக்கிணங்கி அவர்களுக்கு உற்ற துணையாக இருப்பதற்குச் சம்மதித்து, அங்குள்ள சில இந்தியப்பிரமுகர்களைச் சேர்த்துக்கொண்டு, அதே வருஷத்தில், நேடால் இந்தியன் காங்கிரஸ் ஸபையை ஆரம்பித்துச் சிலகாலங்கட்குத்தாமே கவுரவகாரியதரிசியாகவும் இருந்து நடத்தினர்.

அந்த ஸபையின் காரியதரிசியாக இருந்து, நேடால் இந்தியர்களின் கஷ்டநிஷ்டூரங்களையும் உரிமைகளையும் பற்றி அவர் அந்தக்கவர்ன்மெண்டுக்கு மிகவும் எளிமையான நடையில் பலமுறை தெரிவித்துக்கொண்டார். ஆசியா ஜனங்களை நேடாலுக்குள் விடக்கூடாதென்று அந்த நேடால் பார்லிமெண்டார் செய்த சட்டம்பலிக்காமலிருக்கும்படிக்கு, நமது ஸ்ரீமான் காந்தியவர்கள் தலைமையாக முன்னின்று உழைத்துத் தமது கோரிக்கையை நிறைவேற்றிக்கொண்டார்.

பிறகு, இந்தியருக்கிருந்த சுதந்தரங்களை எடுத்துவிட அந்தப் பார்லிமெண்ட் முயன்றபோது, நமது ஸ்ரீமான் காந்தி பிரயத்தனப்

பட்டாரெனினும் அது பயன்பெறமற் போயிற்று. ஆயினும் அந்த முயற்சிக்கு ஒரு பலன் கைகூடிற்று. என்னவென்றால், "இந்தியர்கள் என்ற ஜாதிக்காரணத்தைக்கொண்டே அவர்களுடைய சுதந்தரங்களைக் கெடுத்துவிடக்கூடாது, வேறுகாரணங்களைக்கொண்டு அந்தப் படிச் செய்யவேண்டு" மென்று பிரிட்டிஷ் கவர்ண்மேண்டார் சிபார்சு செய்யும்படி நேர்ந்தது.

இந்தியாவில் தென்னாப்பிரிக்காவிஷயத்தைச் சொன்னது.

1895-ம் வருஷம் ஸ்ரீமான் காந்தி இந்தியாவுக்குத் திரும்பி வந்து, தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்டங்களை இந்தியப்பொது ஜனங்களுக்கு பிரஸங்கங்கள் மூலமாகவும் துண்டுப்பத்திரிகைகள் மூலமாகவும் பிரசித்தப்படுத்தினர். அந்தத் துண்டுப்பத்திரிகைகளில் இல்லாத பொருள்களையுண்டுபண்ணி "நேடாலில் இந்தியர்கள் கொள்ளையிடப்படுகிறதாகவும் அடிக்கப்படுகிறதாகவும் மிருகம்போல் நடத்தப்படுகிறதாகவும் பரிகாரம்பெற வழியற்றிருப்பதாகவும் இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள ஒரு துண்டு பத்திரிகை சொல்லுகிறது" என்று இந்தியாவிலிருந்து ஒரு ராய்டர் தந்தி தப்பும் தவறுமாக அனுப்பப்படவே, அந்தக் காரணத்தால் ஸ்ரீமான் காந்தி நேடாலுக்குத் திரும்பிப்போனபோது பட்டகஷ்டங்களைச் சொல்லி முடியாது. அவர் இந்தியாவிலிருந்து திரும்பிப்போகும்போது அவருடன் அவருடைய மனைவிமக்களும் மற்றும் சில நம்தேசத்தவர்களும் சென்றனர்கள். அவருடைய மனைவி மக்கள் தவிர மற்றவர்கள் இவரால் அழைத்துபோகப்படாதவர்களாயிருந்தும், "கைதேர்ந்த தொழிலாளிகள் அநேகரை அழைத்துக்கொண்டு ஸ்ரீமான் காந்தி வருகிறார்" என்ற தப்பான அபிப்பிராயத்தால் அங்குள்ள ஐரோப்பியர்கள் ஆத்திரங்கொண்டு கலகம் செய்யவே, அதற்குப் பயந்துஅட்டர்ணி ஜெனரல் மிஸ்டர் எஸ்கோம்ப் என்கிறவர் "ஸ்ரீமான் காந்தியும் அவருடைய தேசத்தார்களும் கப்பலை விட்டிறங்கக்கூடாது" என்று கட்டளையிட்டார்.

காந்திக்கு உண்டான முதல் கஷ்டம்.

பத்து நாள்கள் வரையிலும் கப்பலின் சொந்தக்காரர்கள் அதற்குப் பொறுத்திருந்தும் யாதொரு வழியும் ஏற்படாததால், தாங்கள் நஷ்டவழக்குத் தொடுக்கப்போவதாகப் பயமுறுத்த அந்த உத்தரவை மாற்றினார்கள். கப்பலிலிருந்து இந்தியர்கள் இறங்கப்போகிறார்களென்று தெரிந்தவுடன் அந்தக்கப்பல்துறைமுகத்தில் அநேக ஜனங்கள் வந்துசேர்ந்து மிகுந்த கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள். கரையில் இவர்கள் கலகம் செய்துகொண்டிருப்பதைத் தெரிந்த ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், அவர்களுடைய மனவுறுதியையுற்றுணர்ந்து இந்தச் சமயம் ஸ்ரீமான் காந்தி கீழிறங்கினால் உயிர்வதை நேரிடும் என்று தெரிந்துக்கொண்டவராகக் கப்பலில் ஏறி, ஸ்ரீமான் காந்திக்கு எச்சரிக்கை செய்துக்கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் பிரபல பாரிஸ்டர் ஒருவர் நமது காந்தியைப் பார்க்க வேண்டுமென்று அவ்விடத்துக்குப் போக, ஸ்ரீமான் காந்தி இந்தச் சமயம் இறங்கிவிடுவதேநலமென்று கீழிறங்கினார். உடனே அங்கிருந்த ஜனங்கள் அவர் மேல் பாய்ந்து தாக்க ஆரம்பித்தனர். ஆனால் அங்கு வந்திருந்த சூபரின்டேண்டேண்டின் மனைவி அவருடைய அபாயநிலையைக்கண்டு தனது கையிலிருந்த குடையால் மறைத்து அழைத்துக்கொண்டு போய் ஒரு இந்தியரின் கடையில் சேர்த்தனள். அந்தக்கடையையும் அந்த மிருகத்தனம் வாய்ந்த ஜனங்கள் வந்துசூழ்ந்துக்கொள்ள, அவர்கள் அந்தக் கடையைக் கொள்ளையிட்டு விடப்போகிறார்களே என்று பயந்து ஸ்ரீமான் காந்தி ஒரு போலீஸ்காரன் உடையைத் தரித்து மாறுவேடம் பூண்டு வெளியேறிப் போய்விட்டார். மறுநாளைக்குள் அந்தக் கலகம் அடங்கிவிட்டதென்றாலும், 'தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களின் நாகரிகம் மிருகத்தன்மை போன்றதுதான்' என்று இன்றைக்கும் எண்ணுவதற்கு ஒரு அத்தாட்சியாகிவிட்டது. பின்னர் ஸ்ரீமான் காந்தி தமது ஜனங்கள் இறங்கியிருக்கும் இடம் போய்ச்சேர்ந்தார்.

பிறகு சில வருஷங்கள் கழித்து அந்த மிஸ்டர் எஸ்கோம்ப் என்பவர் ஸ்ரீமான் காந்தியை நேரே பார்த்து, "தான் காந்தியின் குணங்களையறியாது அந்தப்படிச்செய்து விட்டதாகவும், அதற்கு ஸ்ரீமான் காந்தியை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறதாகவும்" சொல்லி ஸ்ரீமான் காந்தியை ஸமாதானப்படுத்தினர்.

போவர் யுத்தம்.

1899-ம் வருஷம் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டுக்கும் போவர்களுக்கும் சண்டை நேரும்போது, தென்னாப்பிரிக்கா இந்தியர்களாகிய தங்களை பிரிட்டிஷ்படையோடு சேர்த்துக்கொண்டு போர்புரியும் சுதந்தரத்தைக்கொடுக்காவிட்டாலும், ரணகளத்தில் காயப்பட்டவர்களை டோலியில் சுமந்து சேர்க்கவாவது தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீமான் காந்தி பிடிவாதம் செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் அந்த உத்தரவு பெற்று, அந்த யுத்தத்தின் அபாயகரமான காலங்களிலும் தாமும் தமது படைகளும் உயிருக்குத் துணிந்து தாங்கள் மேற்கொண்ட காரியத்தில் சாமர்த்தியம் காட்டிப் பேருதவி புரிந்தார்கள். யுத்தம் முடிந்தவுடன் இவர் செய்த பேருதவிக்காகப் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் ஸ்ரீமான் காந்திக்கு வந்தனம் செலுத்தி அவரோடு சேர்ந்த மற்றவர்களுக்கும் மெடல் கொடுத்தார்கள். அந்தச்சமயத்தில், யுத்தகர்த்தராக இருந்த லார்டு ராபர்ட்ஸ் என்பவருடைய ஒரேமகன் இறந்து கிடக்க, அந்தப் பிணத்தைச் சுற்றி வெகு தூரத்துக்குப் பீரங்கிகுண்டின் நெருப்பு இருந்தகாலத்தும், நமது காந்தி மிகுந்த துணிவுடன் தமது ஆட்களோடு சென்று அந்தப்பிரேதத்தைத் தூக்கிவந்து சேர்த்தனர். ஸ்ரீமான் காந்தி இந்த இழிவான வேலையைச் செய்தாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குப் பிரியத்தை உண்டுபண்ணி தென்னாப்பிரிக்காவிலிருக்கும் தமது ஸகோதரர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்கலாமென்று எண்ணியே அந்த ஊழியத்தைச் செய்தாரே யொழிய மெடல்வாங்கியணிவதற்கல்ல. இதனால் இந்தியர்களின் மனத்துணிவும் சாமர்த்தியமும் ராஜபக்தியும் தெரிவிக்கப்பட்டதாக, பிரிட்டிஷ்

கவர்ண்மெண்டும் நன்மதிப்புடன் நன்கொடையளிக்கவே, இனி தென்னுப்பிரிக்கா இந்தியருக்கு யாதும் குறைவு இல்லை. பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் அவர்கள்விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்வார்கள் என்று எண்ணியும், தமது தேக அசௌகரியத்தினுலும், தமது குடும்பத்தோடு தென்னுப்பிரிக்காவினின்றும் புறப்பட்டுப் பம்பாயுக்குப்பயணமானர். அப்போது தென்னுப்பிரிக்கா இந்தியர்கள் ஸ்ரீமான் காந்தியினிடத்தில் தங்களுக்கிருக்கும் நன்றியறிதலைக்காட்டும் பொருட்டு அவருக்கும் அவர் மனைவிமக்களுக்குமாகத் தாங்கள் செய்துவைத்திருந்த தங்கநகைகளைக் கொடுத்தனர். அவர் அவற்றில் ஒன்றையாவது எடுத்துக்கொள்ளாமல் அவைகளெல்லாம் பொது நன்மைக்குப் பிரயோஜனப்படட்டும் என்று வைத்துவிட்டுத் திரும்பினுர்.

இந்தியாவுக்குத் திரும்பினது.

அவர் பம்பாய் வந்து சேர்ந்தவுடன், அங்கேயே இனித்தங்கிவிடலாமென்ற யோசனை பிறந்து, இனித் தென்னுப்பிரிக்காவுக்குப் போவதில்லை என்ற தீர்மானத்தையும் செய்துக்கொண்டார். ஏனெனில், போவர் யுத்தத்தின் ஸமாதானத்துக்குப் பிறகு, பிரிட்டிஷ் கவர்ண்மெண்டினுடைய சிபார்சின் பேரில் தென்னுப்பிரிக்கா கவர்ண்மெண்டார், தென்னுப்பிரிக்கா இந்தியர்களைத் தர்மமாக நடத்துவார்களென்று அவர் எண்ணினுர்.

அதனுல் அவர் பம்பாயிலேயே உத்தியோகம் செய்யத் தீர்மானித்துக் கல்கத்தாவுக்குக் காங்கிரஸ் ஸபைக்குப் போய்த்திரும்பி வந்தார். அவர் ஊர்வந்து சேர்வதற்கு முன்னுல் நேடாலிலிருந்து ஒரு தந்தியும் வந்திருந்தது. என்னவெனில், "பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவராகிய மிஸ்டர் சேம்பர்லேன் அங்குவந்திருக்கிறபடியால், அவரைக் கண்டு பிரிட்டிஷ் குடிகளாகிய தங்களது அப்போதைய கஷ்டங்களைச் சொல்லிக்கொள்ள வேண்டுமாதலால், இந்தத்தந்தி கண்ட தக்ஷணம் புறப்பட்டுவரவேண்டியது" என்றிருந்தது.

கொஞ்சமேனும் தாமதிக்காமல் உடனே புறப்பட்டுவிட்டார். இதுதான் பரோபகாரிகளின் செய்கை. நேட்டாலுக்கு வந்தவுடன் தமது கோரிக்கைப்படியே மிஸ்டர் சேம்பர்லேனைப் பேட்டி கண்டு கொண்டார். இதுபோலவே டிரான்ஸ்வால் இந்தியர்களும் விரும்ப, நமது ஸ்ரீமான் காந்தி அங்கேயும் போகும்படி நேர்ந்தது. அங்கே போய்ச் சேர்ந்தாரென்றாலும், அந்த ட்ரான்ஸ்வாலிலுள்ள வெள்ளைக் கார உத்தியோகஸ்தர்கள், மிஸ்டர் காந்தியை இந்தியர்கள் பிரதிநிதியாகக் கொண்டுவரக்கூடாதென்று மறுத்துவிட, காந்தி தம்மை நீக்கிவிட்டு மற்றவர்களைமாத்திரம் மிஸ்டர் சேம்பர்லேனைப்போய்ப் பார்க்கும்படித் தூண்டிவிட்டார். அந்தப்பிரயத்தனமும் பயன்படாமல், மிஸ்டர் சேம்பர்லேனைப்போய்ப்பார்க்கமுடியாமலே போய்விட்டது. டிரான்ஸ்வால் இந்தியர்களுக்குக் கஷ்டம் அதிகரித்துக் கொண்டிருந்தபடியால், அவர்கள் ஸ்ரீமான் காந்தியைத்தங்களோடு இருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்படியே அவர் அங்கே வசிக்க உத்தேசித்து, டிரான்ஸ்வால் ஸுப்ரீம் கோர்ட்டில் ஒரு அடர்ணியாகத் தம்மைத்தாக்கல் செய்துக்கொண்டு உத்தியோகம் பார்த்துவந்தார். 1903-ம் வருஷத்தில் அங்குள்ள பிரமுகர்களைச் சேர்த்துக்கொண்டு டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் இந்தியக்கூட்டம் என்னும் ஒரு சபையை ஆரம்பித்து அதற்குத் தாமொரு கவுரவ காரியதரிசியாக இருந்து வேலைபார்த்துவந்தார்.

பத்திரிகை ஆரம்பித்தது.

அந்தச்சமயம் அவருக்கு ஒரு நினைவு உதித்தது. என்னவென்றால், "தென்னாபிரிக்காவில் உள்ள பலதேசங்களிலுமுள்ள இந்தியர்களையும் ஒருமனதுடையவர்களாகச் செய்யவேண்டும். அரசாங்கம் கூட்டுறவு இவற்றின் தந்திரங்களை அவர்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு அவசியம் ஒரு வர்த்தமானப் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும்" என்பதே. இதனைத்தமது நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவில் இந்தியன் ஒபினியன் என்னும் பத்திரிகையை ஆரம்பித்துவிட்டார். அதற்கு மிஸ்டர்

V. மதனஜித் என்பவரை சொந்தக்காரராகவும் **M. H.** நாஸரை ஆசிரியராகவும் நியமித்தார். அந்தப்பத்திரிகை முதன்முதல் இங்கிலீஷ், குஜராத்தி, ஹிந்தி, தமிழ் என்னும் நான்கு பாஷைகளால் வெளியானது. என்றாலும் பல காரணங்களால், ஹிந்தியும் தமிழும் நிறுத்தப்பட்டுப் போயின. ஸ்ரீமான் காந்தி அந்தப்பத்திரிகைக்குத் தமது சம்பாத்யப்பணத்தைச் செலவு செய்ததோடு இல்லாமல், தமது ஸூக்ஷ்ம புத்தியைக்கொண்டு அரசாங்கம் கூட்டுறவு இவ்விஷயங்களை இங்கிலீஷிலும் குஜராத்திலும் எழுதிப் பலவாண்டுகளும் வெளிப்படுத்தினார்.

ஜோஹான்ஸ்பர்க்கில் ப்ளேக் நோய்.

இப்படியிருக்க, 1904-ம் வருஷத்தில், ஜோஹான்ஸ் பர்க்கில் உள்ள இந்தியர் வாசஸ்தலத்தில் பிளேக் நோய் கண்டு அதிகச்சேதத்தையுண்டாக்குவதையறிந்து, மிஸ்டர் காந்தி, அதனை அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் பயன்படாதுபோனதால், தாமே சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு, சொந்தத்தில் ஒரு ஆஸ்பிடல் வைத்து நோயாளிகளுக்கு நேரில் தாமே உழைக்கவாரம்பித்தார். பிறகு முனிசிபல் அதிகாரிகள், அவர் செய்துக்காட்டிய கடமைக்கு வியந்து சந்தோஷித்தார்கள். அதே வருஷத்தில் முனிசிபாலிடிக்கும் இந்தியர்க்கும் உண்டான விவாதத்தில் உழைத்ததினால், ஸ்ரீமான் காந்திக்குத் திரவியம் அதிகமாகச் சேர்ந்ததானாலும் அவற்றையெல்லாம் நமது மஹான் பொதுஜன ப்ரயோசனம் செய்துவிட்டார்.

1904-ம் வருஷத்தின் முடிவில் தமது இந்தியன் ஒபினியன் என்னும் பத்திரிகையை டர்ப்பன் என்னும் பட்டணத்திலிருந்து நடத்திவரவேண்டும் என்ற யோசனை தோன்றிற்று. பத்திரிகையை நடத்துவதனுடைய முக்கிய அபிப்பிராயம் அவருக்கு என்னவென்றால், இந்தியர்களுக்கு லௌகிகதந்திரங்களைத் தெரிவித்துக்கொடுத்து ஐரோப்பியரால் இந்தியருக்கு மானக்குறைவுண்டாகாமலும், இந்தியரால் ஐரோப்பியருக்கு மனஸ்தாபமுண்டாகமலும் இருக்கச் செய்விக்கவேண்டுமென்பதே. முதன்முதல் தென்னாபிரிக்கா இந்

தியர்களை எந்தவிதத்திலாவது அந்த நாட்டைவிட்டுத் துரத்தப்படாமல் அங்கேயே தங்கியிருக்கும்படியாகச் செய்யவேண்டுவதே முக்ய காரணமென்று நினைத்தார்.

போனிக்ஸ் என்னும் இடத்தை ஏற்படுத்திக்கொண்டது.

இவற்றுக்கெல்லாம் அநுகூலமாக ஸ்ரீமான் காந்தி தமது வாசஸ்தலத்தை டர்பன் பட்டணத்துக்கு 12 மைல் தூரத்தில் நேடாலின் வடகோடி இருப்புப்பாதையின் அருகேயுள்ள போனிக்ஸ் என்னும் இடத்தில் வைத்துக்கொண்டார். அங்கே நமது மஹான் தமது சம்பாத்தியத்தைச் செலவுசெய்து, ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள 100 ஏகர் அளவுள்ள நிலத்தை விலைக்குப் பெற்றுக்கொண்டார். அங்கேதான் தமது அச்சாபீசை மாற்றிக் கொண்டார். சில இந்தியர்களும் ஐரோப்பியர்களும் அவருக்கு அநுகூலமாக அவருடன் அந்த இடத்தில் குடியேறினார்கள். அவர்களுக்குள் ஒரு நிபந்தனை ஏற்பட்டிருந்தது. என்னவெனில், "இவரெல்லாருக்கும் நிலத்திலும் பிரஸ்ஸிலும பாத்யமுண்டு. வரும்படியில் மாதம் 1-க்கு 3 பவுனுக்குமேல் அதிகமாக ஒருவரும் எடுத்துக் கொள்ளாமல் கஷ்டஜீவனம் செய்தாகிலும் அச்சாபீசையும் பத்திரிகையையும் நடத்திக்கொண்டுவரவேண்டியது. எல்லாருக்கும் லாபத்தில் சமபாகமுண்டு. ஸ்ரீமான் காந்திக்காக அங்கு ஒரு வீடு கட்டிக்கொடுத்து 2 ஏகரா நிலத்தையும் அவர் சொந்தமாக உழுது பயிரிடுவதற்கென்று விடவேண்டும். அவற்றின் விலையை அவர் சவுகரியம் ஏற்பட்டபோது வட்டியில்லாமல் ஒரு தடவையிலோ பல தடவையிலோ கொடுக்கலாம். அவர் பொது நன்மைக்கு உழைப்பதற்கென்றே இவ்வளவையும் நடத்திவருவதால், இந்த இந்தியன் ஒபினியன் என்னும் பத்திரிகையும் முக்கியமாக அந்தப்பொது நன்மைக்கே உழைக்கவேண்டும்" என்பதே.

அந்தப்படியே யாவரும் ஒத்து இணங்கியிருந்து அந்தத் தென்னுபிரிக்காவிலுள்ள ஒன்றரை லக்ஷம் இந்தியக் குடிகளின் குழந்தைகளில் அநேகருக்குப் படிப்புச்சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

என்றாலும், தென்னாபிரிக்கா வெள்ளைக்காரர்களின் நிர்ப்பந்தத்தினால் அநேகரது குழந்தைகள் படிப்பதற்கென்று வரச்சரிப்படாததால் எல்லாருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுத்தார்கள் என்று சொல்ல முடியாமற் போயிற்று. நமது ஸ்ரீமான் காந்தியோ, அந்தப்பள்ளிக்கூடத்தை இலவசப்பள்ளிக்கூடமாகத்தான் செய்துள்ளார். தவிரவும், நமது காந்தி, அந்தக்குழந்தைகளின் படிப்புடன் ஒழுக்கங்களையும் விருத்தி செய்துக்கொண்டே வந்தார். அவரது பள்ளிக்கூடத்தில்பழகிய ஆண் பெண் என்னும் இருபாலாரும் தேச நன்மையையும் தர்மத்தையும் ஜீவதயையையுமே முக்ய ஆபரணங்களாகக் கொண்டவர்கள். அந்தப் போனிக்ஸ் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் இந்தியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் எந்த விதமான நன்மையையும் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் ஆகவேண்டுமென்பதே நமது ஸ்ரீமானின் கோரிக்கை. அவர் நல்ல அனுபவமுள்ள தேர்ந்த தேசபக்தர் ஆதலால் நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேச நன்மையையும் தர்ம மார்க்கத்தையும் கற்றுக்கொடுத்தால், பிறகு அவர் இருக்கும் நாடு முழுமையும் சிறந்து விளங்கும் என்பதே அவரது அபிப்பிராயம்.

காப்பிரிகள் கலகம்.

1906-வருஷத்தில் அந்த நாட்டுக்குடிகளாகிய காப்பிரிகள் கலகம் செய்தபொழுது உயிர்ச்சேதம் அதிகமாக நேர்ந்தது. அப்போது நமது ஸ்ரீமான் காந்தி தமது தலைமையின்கீழ் ஒரு டோலிப் படையை ஏற்படுத்திக்கொண்டு கவர்ண்மெண்டுக்கு உதவினர். இந்தக்காரியத்தை அவர் எதற்காகச்செய்தாரென்றால், இந்தியர்களிடத்தில் கவர்ண்மெண்டுக்கு மரியாதையும் தயவும் உண்டாகட்டும் என்றுதான். இவர் இந்தச்சமயம் இந்த வேலையைக்கையாடியபொழுது பட்ட கஷ்டங்கள் சொல்லிமுடியாது. ஒரு நாளைக்கு 30 மைல் தூரத்துக்கப்பாலுள்ள காடடர்ந்த ஒரு குக்கிராமத்துக்குக் குதிரைப்பட்டாளத்துடன் டோளிகளைச்சுமந்து கால்நடையிற் செல்லவேண்டுமானால் எத்தனை சிரமமிருந்திருக்கும். சிற்சில சமயங்

களில் மிகுந்த ஏழைகளுக்கும் காயம் முதலானவற்றை சிகிச்சை செய்வதற்கென்று தாமே முந்திச்செய்வார். தாம் ஒரு மந்திரி குமாரனுயிற்றேயென்ற பெருமையைக் கொள்ளமாட்டார். அறிவிற் சிறந்த இவர் அறிவில்லாத ஒரு காட்டாளுக்கு வேண்டிய ஊழியம் செய்து அவனைத்திருப்தி செய்விப்பார். இது நமக்கு ஒரு ஆச்சரியமே. ஏனெனில், படிப்புங்குலமும் பணமும் உயர்ந்திருப்பவர்களில் அநேகரை இப்படி நாம் பார்த்ததில்லை. அம்மூன்றுடன் கலந்து வருவதான கவுரவம் என்பது இவரைக்கண்டு எங்கேயோ ஒளிந்துக் கொண்டது.

பத்துவிரல் பதிவுச்சட்டம்.

இது முடிந்து இவர் ஜோஹான்ஸ்பர்க்குக்கு வந்தவுடன் திடீரென்று இடிவிழுந்ததுபோல் ஒரு சமாசாரம் காதுக்கெட்டியது. என்ன? டிரான்ஸ்வால் நாட்டில் வாழும் ஆசியாக்காரர்கள் எல்லாரும் தங்களுடைய அங்க அடையாளங்களைச் சொல்லித் தங்களுடைய பத்து விரல்களையும் ரிஜிஸ்டரில் பதிவு செய்துவைத்து வருஷாவருஷம் தங்களைப்பதிவு செய்துகொள்ளவேண்டுமென்பதே. இந்தச் சட்டம் அந்த டிரான்ஸ்வாலிலுள்ள அநேக ஆசியா விரோதிகளான சிலமந்திரிகளால் இரகசியமாகவும் வெகுகாலங்களாகவும் ஆலோசித்துத் தயாரித்துக்கொண்டுவரப்பட்டது. இதனால் ஆசியர்களை அவமானத்துக்குட்படுத்தி ஊரைவிட்டோடிப்போகும்படியாகச்செய்விக்க வேண்டுமென்பதே அவர்கள் கருத்துப்போலும்.

இது தோன்றிய விதத்தை நன்றாகவும் தீர்க்கமாகவும் ஆலோசித்த நமது மஹானும் மேதாவியும் தீர்க்காலோசனையில் சிறந்தவருமான ஸ்ரீமான் காந்தி தமது சகோதரர்களை ஒருங்குகூட்டி "எல்லோரும் ஒரு மனதுடையவராகப் பிடிவாதத்தோடும் ராஜத்ரோகமில்லாமலும் நமது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்படியாகவும் ஒரு உறுதியைக் கைப்பிடித்துக்கொள்ளவேண்டும். அதர்மத்தைத் தர்மத்தினாலேயே வெற்றிகொள்ளவேண்டும். பலாட்டியர்களைப் பொறுமையாலே வெற்றிகொள்ளலாமேயன்றி வேறொன்றால் முடி

யாது. கடைசியில் உயிரிழப்பதாகவிருப்பினும் கொண்ட பிடியை விடப்படாது. தேகம் என்றும் அழியப்பட்டதுதான். ஆனால் மானமோ அப்படியல்ல. என்றும் நிலைத்திருக்கவேண்டியது. ஒருவனுடைய மானமழிந்தால் அவனுடைய குடும்பத்தையும் குலத்தையும் ஊரையும் உற்றாரையும் நட்டாரையும் நாட்டாரையுங்கூட அவமானத்துக்கு ஆளாக்கிவிடும். இப்போது நமக்கு எதிர்த்தட்டாக இருப்பவர்கள் நமது கவர்ண்மெண்டார். நாம் குடிகள். நமக்கு விரோதமான சதியாலோசனைக்காரர்கள் தக்கபலிஷ்டர். இரக்கமில்லாதவர். அரசாங்கத்தின் அதிகாரங்களை யுடையவர்கள். ஆதலால் நமது மானமழிந்து நம்மிந்தியநாட்டின் பெயர் கெடுவதைக் காட்டிலும், நமது உயிரைக்கொடுத்தாவது நமது இந்திய நாட்டின் சரித்திரத்தை பிரஹ்லாதன் சுதன்வா இவர்களுடைய காலத்துச் சரித்திரமாகப் புதுப்பிக்கவேண்டும்." என்று நீதியும் தர்மமும் அதி சுலபமாகச்செய்யக்கூடியதும தமது நாட்டுக்குச் சிறப்புத்தருவதுமான எதிர்க்காமல் எதிர்க்கும் என்னும் முறையைப்போதித்தார். உடனே யாவரும் அப்படியே செய்ய ஒத்துக்கொண்டார்கள். இது முதல்தான் நமது காந்தியின் சரித்திரம் மிகவும் அற்புதத்தைக் காட்டக்கூடியது.

கவர்ண்மெண்டோடு போராட்டம்.

உடனே ஸ்ரீமான் மோஹனதாஸரும் மற்ற இந்தியர்களும் கவர்ண்மெண்டோடெதிர்த்து, 1906-ஹ செப்டம்பர்-மீ 11-உயில் அந்தச்சட்டம் அமுலுக்கு வரப்படாதென்றும், வந்தாலும் நாங்கள் அதற்கு உட்படமாட்டோமென்றும் சத்தியம் செய்துவிட்டார்கள். பிறகு, நமது மஹான் மிஸ்டர் H. O. ஆலி என்பவருடன் இங்கிலாந்துக்குப்போய் டிரான்ஸ்வால் குடியேற்ற நாட்டுமேந்திரியாகிய லார்டு அல்ஜின் துரையைக் கண்டு தென்னாப்பிரிக்கா இந்தியர்களது சரித்திரத்தை நன்றாகவும் சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொன்னார். அதனால் அந்தச்சட்டம் வெளிவருவதற்குத் தாமசப்பட்டது.

இதற்குப்பின்னர், தமது பிரசங்கங்களாலும் பிரசுரங்களாலும் மனுஷத்தன்மை இன்னதென்றும் மரியாதையின்னதென்றும் மதமென்பது இன்னதென்றும் தெரிவித்துக்கொண்டிருந்தார். இவையெல்லாம் செவிடன் காதில் சங்கூதினதுபோலாயிற்று. எப்படியும் அந்தச்சட்டம் 1907-ம் வருஷத்தின் முடிவில் அனுஷ்டானத்துக்கு வந்தேவந்துவிட்டது. என்றாலும், முன் செய்துக்கொண்ட சபதத்தின்படி ஒருவரும் அந்தச்சட்டத்துக்கு வணங்கவில்லை. அதனால் பிரிடோரியாவில் காந்தியினது நண்பர்களில் சிலர் ஆறுமாதக் கடுங்காவலுக்கும் கடினமானவும் இழிவானவுமான தெண்டனைக்கும் ஆட்படுத்தப்பட்டார்கள். இப்படி கவர்ண்மெண்ட் அந்த அநியாயச்சட்டத்துக்கு இணங்காதவர்களை அநியாயமாகச் சிறையில் அடைத்திருப்பதைக்கேட்ட ஸ்ரீமான் காந்தியானவர், உடனே அங்குச்சென்று அந்த மாஜிஸ்டிரேட்டுடன் வாதித்து, "இந்தச்சட்டம் அக்ரமமானது. இதை எடுத்துவிடவேண்டும். இதற்காக ஆசியர்களைச் சிறைப்படுத்தப்படாது. விட்டுவிடவேண்டும். இல்லாவிட்டால், அந்தச்சட்டத்தை அக்ரமமென்று ருசுப்படுத்தி ஆசியருக்கு இந்த உறுதியைக் கற்றுக்கொடுத்தது நானேயாதலால் என்னை அந்தத்தண்டனைக்கு ஆளாக்கவேண்டும்." என்றுசொல்லி மன்றாடித் தமது கட்டாயத்தினால் இரண்டுமாதம் சாதாரணகாவலைப் பெற்றுக்கொண்டார். தாம் சிறைப்பட்டும், சிறையில் தம்மைக்காட்டிலும் தமது நண்பர்கள் 3500 பேரும் கடின தண்டனைக்குட்பட்டிருப்பதை நினைத்து நினைந்து வருந்தினரேயல்லாமல், தமது நிலையைக் கொஞ்சமேனும் கவனித்தாரில்லை.

"எலிக்குத்திண்டாட்டம் பூனைக்குக்கொண்டாட்டம்" என்பதுபோல அந்த யூனியன் கவர்ண்மெண்டுக்கு இந்தவிஷயத்தில் சந்தோஷமேதவிர வேறொரு பரிதாபமென்பது உண்டாகவில்லை.

இந்த சமயத்தில் நமது காந்தியென்பவர் சிறையிலிருந்துக்கொண்டே ஜனரல் ஸ்மட்ஸ் என்பவருடன் பலபடியாக வாதம்செய்துக்கொண்டேயிருந்தார். பிறகு பெருத்த முயர்ச்சியின்மேல்,

யூனியன் கவர்ண்மெண்டுக்குப் பிரதிநிதியாக ஜனரல் ஸ்மட்ஸ் என்பவர் தமது ஆபீஸ் உத்தியோகஸ்தருக்கு முன்பாகக் காந்தியிடம் சமாதான வாக்குக்கொடுத்து இப்போது சட்டப்படி பதிவு செய்துக் கொண்டால், அந்தச்சட்டத்தை அடுத்த பார்லிமெண்ட் கூடும் போது அமுலுக்குக் கொண்டுவாராமல் நிறுத்துகிறேமென்றுச் சிறையிலிருந்தவரை விடுவித்தார். இதற்குள் ஏறக்குறைய மூன்று வாரங்களாயின.

அவரது நோக்கத்தையறியாமல் இந்தியர்களில் மிகுந்த அவசரப்பட்டவர்களும் அற்பப்படிப்புள்ளவர்களுமான சிலர், "ஸ்ரீமான் காந்தி, ஜனரல் ஸ்மட்ஸுடன் சதியாலோசனை செய்துத் தங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டு தாம்மாத்திரம் தப்பித்துக்கொள்ளப் பிரயத்தனம் செய்துக்கொண்டிருக்கிறார்," என்று தப்பான அபிப்பிராயம் கொண்டு கோபாவேசராகி நமது ஸ்ரீமான் காந்திமேல் கூட்டமாகப் பாய்ந்து, அவரைக் குற்றுயிராக்கிவிட்டார்கள். என்றாலும் பெருந்தன்மையே உருக்கொண்டவரான ஸ்ரீமான் மோஹனதாஸர், அவர்கள்மேல் இரக்கங்கொண்டு, தமது எழுந்திருக்கமுடியாத படுக்கையிலிருந்துகொண்டே, "ஜனரல் ஸ்மட்ஸ் உறுதியான வாக்குக்கொடுத்திருக்கிறார். ஒருகாலும் தவறவேமாட்டார். நமக்குள் கலகம் வேண்டாம். கலகம் செய்தவர்கள் கொஞ்சம் நிதானித்து ஆலோசியுங்கள். நமக்குள் கலகஞ்செய்தாரையும் நம்மையும், அவர்களால் அடிபட்டு வீழ்ந்துகிடக்கும் எனது காயங்களிலுள்ள ரத்தமே பசைபோலிருந்து சேர்த்து ஒட்டவைக்கட்டும். நமக்குள் கலகம் செய்துக்கொள்ளாதிருந்தோமானல், நாம் கைப்பிடித்திருக்கும் தருமநெறியான உளம்பொறுத்தல் என்னும் உத்தமமான உபாயம் ஒருகாலும் நம்மை அவமானக்குழியில் தள்ளாது. அவசரப்பட்டு அடாது வழக்குச்செய்யத் தலைப்பட்டோமானல், அவசியம் அவமானத்தையே அடைவோம். ஒருகால் நியாயமும் தவறி வாக்கும் தவறி உறுதியும் அழிந்து கவர்ண்மெண்ட் அந்தச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டால் நமது உளம்பொறுக்கும் உபாயத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்வோம்," என்றார்.

பிறகு அடுத்த பார்லிமெண்ட் திறக்கப்பட்டும் யூனியன் கவர்ண்மெண்டார் மறுபடியும் அந்தச்சட்டத்தை உறுதிப்படுத்தினார்கள். தங்கள் ஜயில் சவுக்கைத் தீட்டினார்கள். அதைக்கண்டு இந்தியரும் எதிர்க்காமல் எதிர்த்தல் என்னும் இரும்புப்போர்வையை தமது உடம்பில் பூட்டினார்கள். தங்களது தர்மமே ஜயம் என்னும் விரதத்தை நாட்டினார்கள். மறுபடியும் போராட்டம் அதிகரித்தது. ஸ்ரீமான் காந்தியும் மிஸ்டர் ஹஜீ ஹாபீபும் இங்கிலாந்தில் மந்திரிகளுடன் வாதித்துக்கொண்டிருந்தார்கள்.

மனித கோடிகளில் ஸ்ரீமான் காந்தியை சிறந்தவரென்று சொல்வதற்கு அநேக குணங்கள் பொருந்தியிருந்தனவேனும், அவர் சத்தியத்தில் அதாவது உண்மை பேசுவதில் வைத்திருந்த அன்பு மிகவும் கொண்டாடத்தகுந்தது. தமது வக்கீல் உத்தியோகத்தில் உண்மையான கேசுக்கு உழைப்பதேயொழிய வேறு தப்பான கேசுகளுக்கு வகாலத்து வாங்கிக்கொள்ளுவதில்லையென்று ஒரு உறுதி கைக்கொண்டிருந்தார். ஒருபொழுது, தமது கக்ஷிக்காரன் ஒருவன் தம்மிடத்தில் உறுதியாக ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டுக் கோர்ட்டுக்குப்போனவுடன் எதிரி வக்கீலால் க்ராஸ் செய்யப்பட்டபோது அவனது வாக்குமூலத்தால், அவன் தம்மிடம் பொய்சொல்லிவிட்டான் என்று தெரிந்தவுடன் அந்தக்கேசைத்தாம் இருந்து நடத்துவதற்கு இஷ்டமில்லையென்று மறுத்துவிட்டு வந்துவிடுவார் என்று கேள்விப்படுகிறோம். தமக்கு மிக்க கஷ்டம் வந்திருக்கும்போதும் ஒரு பொய்யைச்சொல்லித் தப்பித்துக்கொள்ளலாமாக இருந்தாலும், உண்மையையே பேசுவாரேயொழிய தமக்காகினும் மற்றவர்க்காகினும் ஒருகாலும் தம்மனது அறியாதொன்றை இதரர் நம்பும்படி அவர் சொல்வது இல்லை. இவர் நியாயவாதம் செய்யும் கோர்ட்டுகளில் இதர வக்கீல்கள் இவர் விஷயத்தில் மிகுந்த மரியாதையோடு நடந்துகொள்வதற்கு இவரது இந்த சத்திய வ்ரதம் ஒன்றுமே போதுமானதாக இருந்தது. கோர்ட்டுகளில் ஜட்ஜிகளும் மாஜிஸ்ட்ரேட்டுகளும், ஸ்ரீமான் காந்தி கொண்டுவந்திருக்கும் கேசுகளில்

வெகு சீக்கிரத்தில் உண்மை தெரிந்துக்கொள்ளக்கூடியபடி இருப்பதால், யாதொரு சிரமமும் தங்கட்குக் கொடாதிருப்பதற்காக, அவருக்குத்தமது நன்றியைச்செலுத்துவார்கள்.

அவருக்குக் கோபம் என்பதே கிடையாது. இவருடைய விரோதிகளும் இவரிடம் அன்பும் மரியாதையும் செய்ய முன்வருவார்கள். இவரில்லாத காலத்து தமக்கு விரோதமானவர்களோடு இந்த ஸ்ரீமான் காந்தியும் சேர்ந்திருக்கிறாரேயென்று வருத்தப்படுவார்களேயல்லாமல், இவருக்கு எதிரில் வந்தால் பயப்பட்டு நிற்பர். இப்படித்தமக்கு விரோதிகளிடத்திலேயும் காட்டியுள்ள பொறுமையினால், அந்த நேடாலில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் முக்கியமானதாகிய நேடால் மேற்குறி என்னும் பத்திரிகை பின்வருமாறு இந்த ஸ்ரீமானிடத்தில் அனுதாபம் காட்டியிருக்கிறது. இந்த நேடால் மெற்குறி இந்தியர்களிடம் விரோதங்காட்டுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டது:—

"மிஸ்டர் காந்தியை சாட்சி சொல்வதற்கென்று தெருவோடு அழைத்துச்செல்லும்போது அவரது கைகளுக்கு விலங்கிட்டு செல்லும்படி டிரான்ஸ்வால் உத்தியோகஸ்தர்கள் ஆக்ஞையிட்டிருப்பது மிகவும் இகழத்தக்கதும் துக்ககரமானதுமாக இருக்கிறது. இவர் ஒரு சாதாரண திருடரும் அல்லர். ஓடிப்போன அடிமையுமல்லர். ராஜ்ய தந்த்ர கைதியேயிவர். இவரை நன்றாகவும் மரியாதையாகவும் உபசரிக்கவேண்டியது." என்றுசொல்லிக் கண்ணீர்வடித்தது.

இவரது பெருந்தன்மையான நடத்தையைப்பார்த்த யாரும் தாமும் அந்தமாதிரி இருக்கவேண்டுமென்று ஆசைப்படக்கூடியதாக இருக்கும். தமக்கு கடன் கொடுக்கவேண்டியவரிடத்தில் பகைமையும் கோபமும் கொண்டு அவர்மேல் கோர்ட்டுமூலமான சம்மன் யாதும் பிறப்பித்துத் தொந்தரவு செய்வதில்லை. அவன் யோக்யனானால் தமது கடனை என்றைக்கேனும் கொண்டுவந்து கொடுப்பான். அயோக்யனானால் அடிக்கடிக் கஷ்டப்படுத்தினதால் நல்ல நிலைமைக்குத் திருந்தமாட்டானென்பது அவருடைய உறுதி.

தீங்குக்குப்பதில் தீங்குசெய்தால், அது தர்மத்தை நடத்தித்தராது. அந்தத்தீங்குக்குப் பதில் அவரிடத்தில் அன்புகாட்டுதலேதான் என்ற உத்தமகுணத்தைக் கொண்டவர். "இன்னாசெய்தாரை யொறுத்த லவர்நாண நன்னயஞ் செய்துவிடல்" என்னுந் திருக்குறளுக்கு உதாரணம் இவரே.

இதற்கு உதாரணமாக, 1908-ம் வருஷத்தில் ஒரு பட்டாணி தம்மை அடித்துப் பாதியுயிருடன் கீழ்வீழ்த்தியபோது, அவனுக்கு விரோதமாக சாட்சி சொல்வதற்கென்று இவர் அழைக்கப்பட்ட காலையில் இவர் அதனை மறுத்துவிட்டார். அவனைத்தமது அன்பினாலேயே நல்வழிதிருத்த நமது ஸ்ரீமான் காந்தி யுத்தேசித்தார். அப்படியே அவனிடத்தில் தமது அன்பினைப் பலவிதத்திலும் செலுத்திவந்தார். 1910-ல் அந்த மகம்மதியன் டிரான்ஸ்வால் சட்டங்களுக்கு ஒத்தில்லாத தப்பிதத்தால் இந்தியாவுக்குத் திரும்பி விடும்படி உத்தரவானபோது, அவன் நமது ஸ்ரீமான் காந்திக்கு ஒரு வணக்கமான கடிதம் எழுதிச்சென்றான்.

ஸ்ரீமான் காந்தியானவர், எதிலும்சிறந்தது பொது ஜனக்கடமைதான் என்ற கடைப்பிடியைக் கைக்கொண்டவர். அந்த உழைப்பில் தாம் இருக்கும்போது தமக்கேனும் தமது உறவினர்க்கேனும் என்ன ஆபத்து நேர்ந்தாலும் அதனை ஒரு பொருளாக எண்ணுவதில்லை. தாம் முதன்முதல் சிறையில் அடைபட்டிருந்தபோது, போனிக்ஸ் என்னும் இடத்தில் தமது சிறிய குழந்தை மிகுந்த அபாயகரமான நிலையில் இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கவும், தமக்கு ஜோஹான்ஸ்பர்க்கில் அதைக்காட்டிலும் மேலான பொது ஜனக்கடமை செய்யவேண்டியிருக்கிறது; குழந்தையை "பகவான் பார்த்துக்கொள்வார்" என்று போவதை மறுத்து இருந்துவிட்டார். அதைப்போலவே, அவருடைய இரண்டாவது சிறைப்பாட்டில், தாம் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பு சாட்சி சொல்லிக்கொண்டிருக்கும் போது, தமது மனைவி மிகுந்த கஷ்டமான தசையில் வியாதியோடு இருக்கிறாள், அவசியம் வந்தாகவேண்டும் என்ற தந்தி சமாசாரம்

எட்டியிருக்கவும், அப்படியேபோய் மனைவியைப் பார்த்துவரும்படி மாஜிஸ்ட்ரேட் வற்புறுத்தியிருக்கவும், அதனை ஒரு பொருளாகக் கொள்ளாமல் தமது சொந்தக்காரியத்துக்காகச் செல்வதானது பொதுஜன ஒற்றுமையைக் கெடுக்குமென்று சொல்லி மறுத்துவிட்டார். தமது பந்துக்களையும் தம்மையும் காப்பது பகவான் கடமை என்றது அவருடைய உறுதி. இரண்டாவது சிறை மீண்டபிறகு, தமது ஊருக்குச்சென்றுத் தமது மனைவிக்கு வைத்தியம் செய்துக் கொண்டிருக்கும்போது மறுபடியும் டிரான்ஸ்வால் கவர்ண்மெண்டார் தம்மை சிறையிலிருக்கும்படி ஆக்ஞாபித்தார்களென்றதைக் கேட்டவுடன், மரணப்படுக்கையில் உள்ள தமது மனைவியைக் கடவுளிடம் ஒப்பித்துவிட்டு, அதிக விரைவுடன் நேடாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குப் புறப்பட்டுச்சென்றார். அப்போது தமது மூத்த குமாரன் சிலமாதங்களாகச் சிறையிலிருக்கும்போதும், தமது 17 வயதுள்ள இளய குமாரனையும் தம்மோடு அழைத்துச்சென்றார். ஏனெனில், தென்னாபிரிக்கா இந்தியர்கள், அந்த அரசாங்கத்தார் செங்கோன்மைக்கு வரும்வரையில், சிறைச்சாலைக்குப்போவதை நிறுத்தப்படாதாகையால், ஒவ்வொரு தென்னாபிரிக்கா இந்தியனும் சிறையிலிருந்து பழகியிருக்கவேண்டும் என்பது அவரது கொள்கை. இச்செய்கையால் இவருக்குத்தமது குடும்பத்தில் பற்றில்லையென்பது பொருளல்ல வீட்டிலிருக்கும்போது தமது மனைவி மக்களைவிடத் தெய்வமும் ஆனந்தமும் குடும்பத்தைவிட ஸ்வர்க்கமும் வேறில்லையென்றே அவர் சொல்வார். அவர் இந்தியருடைய வழக்கவொழுக்கங்களைத் தவறாது நடந்துகாட்டும் தர்மம் பூண்டவர். வீட்டில் இருக்கும்போதெல்லாம் இந்தியருடைய உடைதான் தரித்துக்கொண்டிருப்பார். அவர் பம்பாயில் தொழில் செய்துகொண்டிருந்தபோது, காலில் செருப்புப் போட்டுக்கொண்டுதான் கோர்ட்டுக்குப்போவார். கோர்ட்டுக்குள் நுழையும்போது செருப்பை வெளியே விட்டுவிட்டுத்தான் உள்ளே போவார். தம்மைப்போலவே பிறரையும் நடத்தவேண்டுமென்ற சிறந்த குணம் அவரிடத்தில் உண்டு.

ஜெயிலில் அவர் இருந்தகாலத்தில் ஒருசமயம், நெய் இல்லாத உணவு உணவல்லவென்று தாம் உணவெடுத்துக்கொள்ளாமல் இருந்தார். அப்போது ஜெயில் அதிகாரிகள் இவருக்கு நெய் ஊற்றும்படி உத்திரவிட்டார்கள். என்றாலும், இவர் தம்முடன் இருக்கும் எல்லாருக்கும் நெய் ஊற்றினுலொழிய தாம் ஏற்றுக்கொள்வதில்லையென்றும் மறுத்துவிட்டார். சிலதினங்கள் கழித்து அதிகாரிகள் அப்படியே எல்லா இந்தியருக்கும் நெய் ஊற்றினுர்கள். தமது கொள்கைகளுக்கு விரோதிகளான பரம சத்துருக்களேயும் பார்த்துக்கூட அவர் தகாத வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இத்தகைய குணநிசயங்களும் இன்னும் தர்மம் என்று சொல்வதற்கு எந்தெந்த விதமாகப் பொருள் செய்யலாமோ அவற்றுக்கெல்லாம் ஒரு பிரத்திக்ஷ சாக்ஷியான இவரை தென்னுபிரிக்கா முதலிய எல்லா நாடுகளிலுமிருக்கும் வெள்ளைக்காரப் பத்திராசியர்களுங்கூட நமது ஸ்ரீமான் காந்தியைப்பற்றிப் பேசும்போது பயபக்தியுடன்தான் சொல்வார்கள்.

ஆனல் அந்நாட்டு வெள்ளைக்குடிகளும் கவர்ண்மெண்டாரும் இந்தியர்களால் பலசமயங்களிலும் பலவிதத்திலும் ஏற்பட்டிருக்கும் நன்றியை முற்றும் மறந்து நமது ஸ்ரீமான் காந்திக்கும் அவரது நண்பர்களுக்கும் முற்றும் விரோதமே காட்டிக்கொண்டு வருகிருர்கள். ஆகவே, இந்தியர்கள் தங்கள் நம்பிக்கை முற்றும் இழக்கப்பட்டவே முன்னிலும் அதிக வீரத்தனத்தோடு தங்களது பொறுமை எதிர்ப்பைச் செய்துகொண்டுவருகிருர்கள். ஒவ்வொரு சமயத்திலும் தமது நண்பருக்கு அந்தப்பொறுமை எதிர்ப்பினுடைய அர்த்தத்தை விளக்கமாகப் பிரசங்கம்செய்யத் தவறுவதில்லை. அதற்கு உதாரணமாகப் பலசரித்திரங்களையும் எடுத்துப்புகட்டுவார். அவ்வப்போது அந்த கவர்ண்மெண்டார் சில வாக்குறுதிகள் கொடுத்தாரேனும் அடுத்த பார்லிமெண்டில் அது நடந்தேறுமல் நம்மவர்க்குக் கஷ்டம் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஏனெனில், அந்த கவர்ண்மெண்டு மந்திரிகளில் சிலர் நம்மவரிடம் தயவுகாட்ட முன்

வந்தாலும், மற்றபடி அந்தநாட்டு வெள்ளைக்குடிகளின் பெரும்பால ருடையவும் மற்ற மந்திரிகளுடையவும் நிர்ப்பந்தத்தால் அவர்களால் யாதொரு நன்மையும் செய்யமுடியாமல் போயிற்று. அதனால் கலகம் அதிகப்பட்டு நம்மவர் ஜெயில் வாசமே முக்கியமாகக் கொண்டனர். இக்காரணங்களால் நமது ஸ்ரீமான் காந்தி இப்போது நான் காம்முறையாகச் சிறையில் அடைபட்டார். 1911-ம் வருஷத்தில், மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியாருடைய பட்டாபிஷேக சமயத்தில், கவர்ண்மெண்டார் நமது ஸ்ரீமான் காந்தியிடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு இந்தப்பொறுமை யுத்தத்தை நிறுத்தி வைக்குப்படி வேண்டிக்கொண்டார்கள். சில சுதந்தரங்களைக் கொடுப்பதாக எழுத்துமூலமாகவும் உடன்படிக்கை செய்துகொடுத்தார்கள். ஆனாலும் அந்தப்பட்டாபிஷேகம் முடிந்தபிறகு, அந்தத் தென்னாபிரிக்காவிலுள்ள நான்கு மாகாணத்தார்களும் ஒருங்கு கூடிப் பேசிக்கொண்டவர்களாகத் தங்களது உடன்படிக்கையை மீறி நடந்துவருகிறார்கள்.

இந்தியாவில் இந்தியாவுக்காகப்பாடுபடும் கனம் கோகலே அவர்கள் 1912-ம் வருஷக்கடைசியில் இங்கிலாந்திலிருந்து திரும்பிவரும் போது, தென்னாப்பிரிக்காவுக்குச்சென்று அந்தநாட்டு மந்திரிகளைக் கண்டு பேசினார். அந்த மந்திரிகளும் அடுத்த பார்லிமெண்டில் இந்தியர்களுக்கு நன்மை தேடுவதாக வாக்களித்தார்கள். கோகலே இந்தியாவுக்கு வந்தபின், பார்லிமெண்ட் திறந்தும் இந்தியருடைய கஷ்டம் விடிந்தபாடில்லை. ஒவ்வொரு பார்லிமெண்டின் கூட்டத்தின்போதும் ஒவ்வொரு புதுச்சட்டம் ஏற்பட்டதேயொழிய வேறில்லை.

ஆகையால் கடைசியாக, 1913-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் நமது மோஹனதாஸர், தாம் மந்திரிகளுக்கு எவ்வளவு தெரிவித்துக்கொண்டும் பயன்படாமற்போகவே மறுபடியும் அந்த உள்ளம் பொறுத்தலாகிய பொறுமை எதிர்ப்பைத்தொடங்கி இன்னும் எதிர்க்காமல் எதிர்த்துக்கொண்டு வருகிறார்கள் முன்னம் அந்தக்கவர்ண்

மெண்டார் செய்திருக்கும் வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படும் வரையில், பின்வாங்குவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் சுமார் முப்பத்தைந்தாயிரம் இந்தியர்கள் சிறையில் இருக்கிறார்கள். இவர்களோடு இவர்களிடம் அன்பு காட்டிவந்தவர்களும் நமது காந்தியின் பிரியநண்பர்களுமான சில ஐரோப்பியர்களுங்கூடச் சிறைப்பட்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் ஜெயில் இடங்கொள்ளாததால் அந்தந்த தங்கச்சுரங்கங்களும் தோட்டங்களும் வேலைச்சாலைகளும் சிறைச்சாலைகளாகமாற்றி அங்கே இந்தியர்களை தொந்தரவு படுத்துகிறார்கள். இவருள் சில இந்தியர்கள் சவுக்கினால் அடிபட்டும் துப்பாக்கியினால் சுடப்பட்டும் இறந்துபட்டனர். அந்நாட்டு அநியாயச்சட்டங்களைத் தாங்காதவராக இந்தியஸ்திரீகளும் சிறையில அடைபட்டதால், பல குழந்தைகள் ஆதரிப்பாரின்றி இறந்தன. இதற்காக இந்தியாவில் நம்மவர் கோகலேயினது நன்முயற்சியால் பெருந்தொகை வசூல் செய்து அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தைப்பற்றி, பொருந்திய நமது இந்தியா ராஜப்பிரதிநிதியாகிய லார்டு ஹார்ட்டிஞ்சு துரையவர்கள் தமது தென்னிந்தியா பயணத்தின்போது சென்னையில், இந்தியர்களிடம் தமக்குண்டான பரிவைக்காட்டித் தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டார் செய்வது அக்கிரமந்தானென்று ஒருபெரிய பிரசங்கமும்செய்து பெரிய கவர்ன்மெண்டாருக்கும் நம்மைப்பற்றி சிபார்சு செய்திருக்கிறார்கள். டில்லியில் இருக்கும் ரேவரண்டு ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்னும் பாதிரியாரும் தமது நண்பர் பியர்சன் என்பவருடன் யாராலும் வேண்டிக்கொள்ளப் படாமலேயே தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய்நமக்காகப் பாடுபடுகிறார்.

கனம் பொருந்திய லார்டு ஹார்டிஞ்சு துரையவர்கள் நன்முயற்சியால் மத்தியமாகாண கமிஷனராகிய ஸர் பென்ஜமின் ராபர்ட்ஸன் என்னும் பிரபு விசாரணைக்கமிட்டிக்கு மெம்பராக இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்.

இப்போது இந்தியர்களின் விசாரணைக்காக ஒரு கமிட்டி கூடியிருக்கிறபடியால் அதற்குத் தலைவரான மிஸ்டர் சால்மன் துரை ஸ்ரீமான் காந்தி, மிஸ்டர் போலக், மிஸ்டர் காலன்பேக் என்னும் மூவரையும் சிறையினின்றும் விடுவித்திருக்கிறார். என்றாலும் நமது ஸ்ரீமான் காந்தி தமது கூட்டத்தார் சிறையிலிருந்து வெளி வரும்வரை தாம் வெளியில் இருந்தாலும் அவர்களைப்போலவே ஆகாரமும் ஆடையும் கொண்டிருப்பதாக வ்ரதம் கொண்டு அப்படியே நடந்துவருகிறார். இப்போது விசாரணையும் நடந்துவருகிறது. சில நாட்களுக்குமுன் இந்தியர்களின் பொறுமையின் பலன் பலித்ததுபோல, அந்த கவர்ண்மெண்டாருக்கு ஒரு கஷ்டம் நேரிட்டது. என்னவெனில் அந்தநாட்டு வெள்ளைக்கார வேலைக்காரரெல்லாரும் பெரிய உத்தியோகஸ்தர் முதல் சிறியவர்வரை கவர்ண்மெண்டுக்கு விரோதமாகக்கலகம் செய்து வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டுத் தொந்தரவு செய்தார்கள். கவர்ண்மெண்டுக்கும் அவர்களுக்கும் பெரிய சண்டையும் ஏற்படும் போலிருந்தது. கலகக்காரர்கள் எல்லாரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். கவர்ண்மெண்டார் ரஹஸிய ஆலோசனை செய்து அந்தக்கலகத்தின் தலைவர்களான சில வெள்ளையர்களை யாருக்கும்தெரியாமல் கப்பலேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டார்கள். இதனைப்பற்றி இங்கிலாந்தில் குழப்பமுண்டாயிருக்கிறது. இந்தக்கலகத்தில் அந்த கவர்ண்மெண்டார் பட்ட சிரமத்துக்கு அளவேயில்லை. மந்திரிகள் எல்லாரும் துன்பம் பொறுக்கமாட்டாமல் கண்ணில் நீரை வடித்து அழுதுவிட்டார்கள் என்றே சொல்லும்படி இருந்தது. இந்தச்சமயத்தில் நம்மிந்தியரும் தமது பொறுமைப் போரை நடத்தியிருந்தார்களானால் கவர்ண்மெண்டு அழிந்தேபோயிருக்கும். ஆனால் நமது காருண்ய மூர்த்தியாகிய ஸ்ரீமான் காந்தியவர்கள் தமது இயற்கையான பொறுமை குணத்தால் தமது நண்பர்களை வேண்டிக்கொண்டு தமது எதிர்க்காமல் எதிர்த்தலை நிறுத்திவைத்தார்,

இப்படி ஸ்ரீமான் காந்தி காட்டின பேருதவிக்கு அந்நாட்டு மந்திரி ஜனரல் ஸ்மட்ஸ் என்பவர் நமது மோஹனதாஸனை நேரில் கண்டு அவருக்கு மரியாதை மிகுதியாகக்காட்டி உபசரித்து விசாரணைக்கமிஷனில் இந்தியருக்கு நன்மை செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் இந்த ஸ்மட்ஸ் துரைக்கு வாக்குக் கொடுப்பதும் உடனே அதையழிப்பதும் அதிக சுலபமானகாரியம் என்று தென்னாப்பிரிக்கா இந்தியச் சரித்திரத்தைத் தெரிந்தவர்கள் அறிந்து கொள்வார்கள். அது எப்படி முடியுமோ பிறகு தெரியும். அடுத்தமித்திரனில் விவரம் தெரியலாகும். இப்போது விசாரணைக் கமிஷன் நடந்துக்கொண்டிருக்கிறது.

பத்திராதிபர்.

தென்னாப்பிரிக்காவில்

நம்மவர்மேல் ஏற்படுத்தியிருக்கும் மானக்கேடான சட்டங்கள்.

1. கேப்காலனி, நேடால், ஆரஞ்சியா, டிரான்ஸ்வால் என்ற 4 நாடுகளும் கூடியதுதான் தென்னாப்பிரிக்கா யூனியன் என்பது. இவைகள் போயர்யுத்தம் சமாதானமான வருஷமாகிய 1901-ல் ஒன்றாகச் சேர்ந்துகொண்டன. இப்போது அவைகள் ஒன்று சேர்ந்து ஒரே பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிவிட்டபோதிலும், இந்தியர் மாத்திரம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் போகக் கூடாதாம்.

2. நாகரிகம் உண்டாகாதிருந்த பழைய காலங்களில், ஒரு மதப்பற்றுள்ள ஒரு அரசாங்கம் வேறு மதத்தினர்க்குத் தலைவரி என்ற ஒரு வரியை விதித்து ஹிம்சித்து எவ்விதத்திலும் அம்மற்றவரைத் தம்மதத்தினராக்கிக்கொள்வதில் முயற்சி எடுத்திருந்ததாகச் சரித்திரத்தில் படிக்கிறோம். நாகரிகம் முதிர்ச்சியடைந்த இந்தக்காலத்திலும், இயற்கையாக உண்டாயிருக்கும் கருப்புத் தோலுக்கும் வெள்ளைத் தோலுக்கும் மாத்திரம் உண்டான பேதத்தை பெண்ணி, மற்றபடியான மதம் ஜாதி என்ற யாதொரு சம்பந்தத்தையும் ஒப்புக்கொள்ளாமல், அந்தத் தென்னாப்பிரிக்காவில் இருக்கும் வெள்ளைக்காரர்கள் இந்தியர்களுக்கும் மற்ற ஆசியாக்காரர்களுக்கும் வருஷம் ஒன்றுக்கு 3 பவுன் அல்லது 45 ரூபாய் தலைவரியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வரி ஏற்பட்ட சில வருஷங்களுக்குப் பின்னர், ஆணானால் 16 வயதுக்கு மேற்பட்டும் பெண்ணானால் 13 வயதுக்கு மேற்பட்டும் இந்த வரியைச் செலுத்தவேண்டியதென்று உறுதியும் செய்யப்பட்டது.

3. ஒவ்வொரு மதத்தானும் தன்னுடைய மதச்சடங்குகள் எல்லாம் தெய்வாம்சம் உடையவர்களால் ஏற்படுத்தப்பட்டன என்று உறுதியான நம்பிக்கையுடையவன் என்பதில் சந்தேகமில்லை. அப்படியே அந்தச்சட்டப்படி குறித்த சடங்குகளோடு நடத்தப்பட்ட

விவாஹத்தினால் சம்மந்தப்பட்ட ஒரு மதத்தானுடைய மனைவியை, வேறொரு மதத்தையுடைய ஒரு ஜாதியார் தங்களுடைய சட்டப்படி, அவனுக்கு மனைவி அல்ல வைப்பாட்டிதான் என்றும், அவளிடத்தில் அவனுக்குப்பிறக்கும் சந்ததிகள் அவர்களுக்கு வார்சுகள் அல்லவென்றும் சொல்லுவாரானால், இதனை அநியாயம் என்று சொல்ல என்ன தடையிருக்கிறது? இது பிறமதங்களை அவமதித்துப் பிறமதத்தாரைத் தம்மதத்தோடு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று செய்த சூழ்ச்சியேதானென்று நாம் சொல்லுவோம். அதாவது தென்னாபிரிக்காவில் உள்ள ஒவ்வொரு இந்தியனுக்கும் (இந்துவாயினும் மகமதியனாயினும்) தமது மதச்சட்டப்படி விவாகஞ்செய்து சம்மந்தப்பட்டுள்ள மனைவி அந்த இந்தியனுக்கு வைப்பாட்டிதான் மனைவி அல்ல என்று சட்டம் விதித்திருக்கிறார்கள். அவர்களுடைய சந்ததியாரும் அவர்களுக்கு வார்சுகள் அல்லராம்.

4. தென்னாபிரிக்காவில் குடியேறியிருக்கும் ஒவ்வொரு இந்தியனும், நம்தேசத்தில் குறவர்கள் கொடுப்பதுபோல் தங்களுடைய பத்து விரல்களையும் அடையாளமாகப் பதித்து ரிஜிஸ்டர் செய்துக்கொடுக்கவேண்டுமாம்.

5. ஒரு பொதுவான அரசாங்கத்தின் கீழுள்ள குடிகளில் இந்தியரும் ஆசியரும் மாத்திரம் அந்தத் தென்னாபிரிக்காவிலுள்ள ஐரோப்பியருக்குள்ள யாதொருவிதமான பாத்தியமும் அடையப்படாதாம்.

இவர் விட்டுவிட்டவை.

1. பிரிட்டிஷ் ராஜ்யத்தில் எங்குச்செல்லவும் எங்கு வசிக்கவும் இந்தியருக்கு பாத்தியமுண்டு. இதையும் இவர் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அதாவது தென்னாபிரிக்காவானது, வெள்ளைக்காரர்கள் குடியேறின நாடாகவே ஒப்புக்கொள்ளவும் சம்மதித்துவிட்டார்கள்.

2. வருஷாவருஷம் சில இந்தியர்கள் தாம் புதிதாகச் செல்ல இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

3. இங்கிலாந்துக்கு நாம் சென்று அங்கே சில வருஷங்கள் இருந்துவிட்டால், பார்லிமெண்டுக்கு மெம்பரைத் தேடியெடுக்க வோட்டுக்கொடுக்கக்கூடிய பாத்தியம் இந்தியருக்கும் உண்டாகிறது. அவ்வித பாத்தியத்தையுங்கூட வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள்.

4. ஒரு முனிசிபாலிடியில் அனுபவிக்கக்கூடிய சாமான்ய சுதந்தரத்தைக்கூட வேண்டாமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஓரே குறிப்பிட்ட இடத்தில் வசித்திருக்கவும்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். லைசென்ஸ் பெற்றுக்கொண்டுதான் வியாபாரம் செய்யவேண்டுமென்றால் அதற்கும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

5. ரயில் வண்டி டிராம் வண்டி முதலானவைகளில் செல்லும்போது இந்தியருக்கென்று ஏற்பட்டிருக்கும் நிபந்தனைக்கும் உட்படுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

6. கால்நடைப் பாதைகளில் நடக்கக்கூடாது ஒதுங்கித்தான் செல்லவேண்டுமென்றால் அதற்கும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இவைபோல் இன்னும் அநேக கஷ்டங்களுண்டு. ஐரோப்பியருடன் கூடஇருந்து வசிக்கவும் கூடாது. அவருடன் ஒரு வாகனத்தில் சமமாக சவாரி செய்யவும்கூடாது. அவர் போகும்வழியில் அவரோடு கலந்து இவர்கள் வழிநடக்கக்கூடாது. நிர்ப்பந்தமில்லாமல் வியாபாரம் செய்யவும்கூடாது. என்றால், மிருகத்தைப்போலவேதான் நம்மை அவர்கள் மதித்திருக்கிறார்கள் என்று எண்ணுவதற்கு இடமாகின்றது.

இவ்வளவு நிர்ப்பந்தங்களும் அவர்கள் நம்மவர்க்குச்செய்வது அங்குள்ள நம்மவர்களை அந்நாட்டிலிருந்து ஓட்டிவிடவேண்டுமென்பதே அவர் கொள்கை. இவற்றை அறிந்துகொண்டுத்தான் ஸ்ரீமான் காந்தி முதலிய பெரியோர்கள் அங்கிருந்தே தவித்துக்கொண்

டிருக்கிறார்கள். அப்படியில்லாது இங்கே வந்துவிடுவார்களானால், நம்மை (இந்தியரை) ஒருவரும் ஒரு அல்ப விஷயத்திலும்கூட மதிக்கமாட்டார்கள். தவிர, அந்நாடுகளிலுள்ள ஒன்றரை லக்ஷக்கணக்குள்ள நம்மவர்களில், முப்பத்தையாயிரம் பேரை ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்பட்ட கூலிகள், மற்றவர்கள், அந்த ஒப்பந்தக்காலம் கழிந்து தாராளமாக வசிக்கக்கூடிய பாத்யமுள்ளவர்களாகவும், இங்கிருந்து வியாபாரத்துக்கென்று தமது சொந்தச்செலவில் போனவர்களாகவும் தமது சொந்தச் செலவிலேயே அங்கு வசிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அங்குப் பயிர்செய்தும் வியாபாரம் செய்தும் பிழைத்து வருகின்றனர். இப்படி சுயேச்சையாய் இருக்கும் இவர்களும் யாதொரு காரணமுமில்லாமல், அவர்கள் செய்யும் நிர்ப்பந்தத்திற்காகவே பயந்து, தமக்குள்ள எல்லாவிதமான சொத்துக்களையும் இழந்துவிட்டு ஓடிவந்துவிடுகிறதென்றால், இதனைக்காட்டிலும் நமக்கு அவமானம் வேறு எதனால் உண்டாகப் போகிறது? வெள்ளைக்காரர்களும் அந்தநாட்டுக்குப்போய்க் குடியேறினவர்கள்தாம். நம்மவர்களும் போய்க் குடியேறினவர்கள்தாம். அவர்களும் பிரிட்டிஷ்க்குடிகள். நம்மவர்களும் பிரிட்டிஷ்க்குடிகள். ஆகையால், அங்கு வெள்ளைக்காரர்களுக்குள்ள எல்லாவித பாத்தியமும் நமக்கும் உண்டு. அப்படியிருக்க அவர்களுக்குப் பயந்து ஓடிவந்துவிடுவதென்றால், இது கவுரவமாகுமா? பிறகு இதர தேசத்தார் நம்மை மதிப்பார்களா? உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாரோடும் நமக்கு வியாபாரம் முதலிய சவுகரியங்களால் பாத்தியமுண்டாயிருக்கிறது. தென்னாபிரிக்காவின் பாத்தியத்தை நம்மவர் இழந்து ஓடிவந்துவிட்டால், நமது நாணயம் எந்தத்தேசத்திலும் இராது. நாணயம் செல்லாமல்போனால் வியாபாரம் குறையும். அது குறைந்தால் கைத்தொழில் குறையும். அது குறைய இன்னும் தரித்திரம் நமக்கு அதிகரிக்கும். ஆதலால், எவ்விதமான கஷ்டங்களைப் பட்டாவது நமது பெருமையையும் நாணயத்தையும் நிலைநிறுத்தினால்தான் அன்னிய தேசத்தாரும் நம்மை அதிகமாக மதித்துப் பாராட்டுவார்கள். அப்போது நமது பூர்வீக ஆரியாது-

பெயரை நாமும் சொல்லிக்கொள்ளக்கூடிய கவுரவம் நமக்குண்டாகும். நமது பூர்வீகர்களுடைய ஒழுக்கங்களையும் உறுதிகளையும் சரித்திர வாயிலாகப்படித்தன்றோ, லார்டு ஆம்ப்தில் பிரபு சில தினங்கட்கு முன் டைம்ஸ் பத்திரிகையில், இந்தியர்களை இப்படி மானக்கேட்டிற்கு ஆட்படுத்தினால், உயிரையிழந்தாயினும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்ற அபிப்பிராயத்தைச் சொன்னார். இதுதானே செய்யவேண்டிய உண்மை?

தென்னாபிரிக்காவில் நம்மவர் கேட்கும் சுதந்திரங்கள்.

1. ஐரோப்பியர் இந்தியர் என்னும் பேதம் பாராமல், பிரிட்டிஷ் ப்ரஜைகளுக்குள்ள சுதந்தரங்கள் எல்லாம் நமக்கும் வேண்டும்.

2. அந்தத் தென்னாபிரிக்காவில், ஒப்பந்தம் கழிந்த நம்மவர்கள், 3 வருஷம் கிரமமாக 3 பவுன் வரியைச் செலுத்திவிட்டார்களானால், பிறகு அவர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் அங்கேயே ஸ்திரவாசம் செய்துகொண்டிருத்தல்வேண்டும்.

3. தென்னாபிரிக்காவிலும் மற்ற இடங்களிலும் இந்துக்களும் மகம்மதியர்களும் தத்தம் விதிப்படி விவாகம் செய்துக்கொண்டிருந்தால், அந்த விவாகம் சட்டப்படி செல்லத்தக்கதென ஒப்புக்கொள்ளவேண்டும்.

4. புதிதாக உண்டான இமிகிரேஷன் சட்டம் ஏற்படுத்துவதற்கு, தென்னாபிரிக்கா இந்தியர்கள் கேப்காலனி நாட்டுக்குத் தடையில்லாமல் போய்க்கொண்டிருந்ததைப்போல, இனிமேலும் போகும்படிச் செய்யவேண்டும்.

5. மிகவும் அவமானத்தைத் தருவதான பத்துவிரல் பதிவுச் சட்டத்தையும் மூன்று பவுன் தலைவரியையும் தள்ளிவிடவேண்டும்.

பெண்கள் பக்கம்.

இந்தியஸ்திரீகள் II.

கல்வியை தேசிய பாஷைகளில் கொடுப்பதேன்?

பெண்களுக்கு உயர்தரக்கல்விகொடுத்து படிப்பிலும் ஞானத்திலும் சிறந்தஸ்திரீரத்னங்களை உண்டுபண்ண வேண்டுமென்றும், அப்படிச்செய்தால்தான் அவர்களுடைய குறைகளைப் பரிகரிக்க முடியுமென்றும் சென்ற ஆறாவது சஞ்சிகையில் கூறினேன். உயர்தரக் கல்வியினால் ஆங்கிலங்கற்று விஷயங்களையறிவதல்லவென்றும், மேற்படிவிஷயங்களை தேசியபாஷைகளில் அறிவதோடுகூட நம்தேசத்து சாஸ்திர புராண இதிஹாஸாதிகளையும் விசேஷமாகப்படித்து பண்டிதைகளாகஇருக்கவேண்டுமென்றும், முன்னமேயேசொன்னேன். தற்காலத்தில் ஆங்கிலங்கற்று பீ. ஏ. பட்டம் பெற்ற மாதுமணிகள் சிலரிருக்கிறார்கள். இன்னும் அநேகம்பேர் காலேஜ்களில் வாசித்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஸ்திரீகள் காலேஜ்களில் இப்படிப்பட்ட உயர்தரக்கல்வியை யடைவதில் நாம் இஷ்டப்படவில்லை. ஆனால் நான் அறிவில் ஆணறிவு பெண்ணறிவு என்று இல்லையென்றும், அறிவை புருஷருக்கென்றும் ஸ்திரீகளுக்கென்றும் பாகுபாடு செய்யக்கூடாதென்றும் சொன்னேன். அதனால் அபிப்பிராய பேதமுள்ளவனாக எண்ணவேண்டாம். இப்பொழுதும் ஸ்திரீகளுக்கு உயர்தரக்கல்வி கொடுக்க வேண்டுமென்றும், ஸ்திரீகளும் நம்மைப்போல் அறிவை விசாலப்படுத்த வேண்டுமென்றும் சொல்லுகிறேன். ஆனால் நாம் எந்தவிஷயங்களை ஆங்கிலத்தில் கற்கின்றோமோ, எந்தவிஷயங்கள் ஆங்கிலபாஷையின் மூலமாக நம்புத்தியை விசாலப் படுத்துகின்றனவோ, அதே விஷயங்களை நமது ஸ்திரீகள் சுதேசிய பாஷைகளில் கற்று அறிந்து புத்தியை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்.

ஆகையால் கல்வியை தேசியபாஷைகளிலேதான் கொடுக்க வேண்டுமோவென்று விசாரிப்போம். ஒவ்வொருபாஷையும் அதற்

கென்று ஏற்பட்ட இயற்கையான குணங்களையுடையதாகவும் இருக்கின்றது. அப்படியே பாஷை ஒவ்வொன்றும் அவைகளின் சுபாவத்துக்குத் தக்கவாறு ஜனங்களின் நடையுடைபாவனைகளை மாற்றக்கூடுமென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படியானவிஷயம். நம்முடைய தேசபாஷையை விட்டு அன்னிய பாஷைகளிலேயே விஷயங்களை கற்பதால் நாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் அப்பாஷைகளின் மூலமாகவே ஏற்படுகிறது. தேசியபாஷைகளில் நாம் ஒருவார்த்தையை எப்படி அர்த்தங் கொள்ளுகிறோமோ அப்படியே வேறுபாஷையைப் பேசுகிறவர்கள் அர்த்தங் கொள்ளுகிறதில்லை. உதாரணமாக குடியாதே என்றால் நாம் குடியை அறவே ஒழித்து விடவேண்டும் என்று சொல்லுகிறோம். ஐரோப்பியர்கள் அதே வார்த்தைக்கு (Drink not) அதிகமாகக் குடிக்காதே மிதமாகக்குடி என்று அர்த்தம் கொள்ளுகிறார்கள். நான் சிலவருஷங்களுக்குமுன் குடியை நிறுத்தல் என்னும் ஒரு புஸ்தகத்தை ஆங்கிலத்தில் வாசித்தேன். அதில் அமெரிக்கா இங்கிலாந்து முதலிய விடங்களில் காலன் காலன்களாகக் குடிக்கிறார்களென்றும் அப்படியில்லாமல் மிதமாகக் குடிக்கவேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. பரதேச பாஷைகளிலுள்ள இப்படிப்பட்ட விஷயங்களைக்கற்பதால் நம்மனம் எப்படி மாறக்கூடும் என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். நம் சிறுவர்கள் பரதேச பாஷைகளில் விஷயங்களைக்கற்பதும் அவைகளின் மூலமாகவே எண்ணங்களை வெளியிடுவதுமாக விருப்பதால், அப்பாஷைகளின் ஸ்வபாவத்துக்குத் தகுந்தவாறு மாற்றப்படுகிறார்கள் என்பதற்குச் சந்தேகம் என்ன? அரைக்குடுமி வைத்தலும் முக்கால்குடுமி வைத்தலும் மொட்டையடித்துக் கொள்வதும் முகக்ஷவரம் செய்துகொள்வதும் பெற்றோர்களனுப்பும் பணத்தையெல்லாம் நெக்டை காலர்களிலும் செலவழிப்பதும் Full suit போட்டுக் கொள்வதும் புகைவிடுவதும் காபி சோடா இவைகளை நினைத்தபோது ரிப்ரஷ்மெண்டு அரைக்குப்போய்க் குடித்துவிட்டு வெறியனைப்போல் வெளிக்கிளம்புவதும் இதுபோல அநேகம் தேசிய ஆசாரங்களுக்கு முற்றிலும் விரோதமானவைகளை நம்சிறுவர்கள் கடைபிடிப்பதற்குக்

காரணம், தேசியபாஷைகளைத் தவிர்த்து வேறுபாஷைகளில் விஷயங்களைக்கற்பதும் அவைகளை வெளியிடுதலுமல்லவோ?

மேலும் ஒவ்வொரு தேசத்தானையும் இவன் சீனதேசத்தான் இவன் ஜப்பானியன் இவன் இங்கிலீஷ்க்காரன் என்று அவர்களுடைய நடையுடைபாவனைகளால் அறிந்துகொள்ளலாம். தற்காலத்தில் இந்தியர்களைக் கவனித்துப்பார்ப்போமானல் விசித்திரத்திலும் விசித்திரமாகக் காணப்படும். ஒரு பெரிய பட்டணத்து வீதிகளில் போனல் இந்தியர்களை தினுசு தினுசாகக்காணலாம். Full suit என்ன டெப்பி என்ன குல்லா என்ன தலைப்பாகை என்ன மொட்டை என்ன கிராப் என்ன குடுமி என்ன அனேகவிதங்களாக இருக்கிறார்கள். ஜப்பானியரும் மேல்நாட்டாருடைய சாஸ்திரங்களைக் கற்றுவருகிறார்கள். அவர்கள் ஏன் மாறவில்லை? தேசியபாஷைகளின் மூலமாக விஷயங்களை யறிவதுதான். நாம் ஆங்கிலங்கற்பதால் தான் (பரதேசபாஷையில் விஷயங்களை யறிவதால்தான்) தேசத்தின் ஒற்றுமையுணர்ச்சியைக் கவனியாமல் உலகத்திலில்லாத தினுசுகளை யெல்லாம் உண்டுபண்ணிக் கொள்கிறோம்.

இப்பொழுது நமது ஸ்திரீகள் விஷயங்களைக் கற்பதும் எண்ணங்களை வெளியிடுவதும் தேசியபாஷைகளிலேயே இருப்பதாலல்லவோ அவர்கள் ஆங்கிலங்கற்ற புருஷர்களால் இந்திய ஜனசமூகத்திற்குக்கொண்டுவரப்படும் கேடுகளைத்தடுக்க ஒருபலமானகோட்டைபோலிருக்கிறார்கள். இக்கோட்டையும் இல்லாதிருந்தால் இந்தியஜனசமூகம் எவ்வாறு மாறியிருக்குமோ நாமறியோம்.

மேலும் நாம், அனேகமாயிர வருஷங்களாகக் கற்றதும் கேட்டதும் நமது எண்ணங்களை வெளியிட்டதும் தேசியபாஷைகளிலேயே அல்லவா? இவ்வாறிருப்பதைத் திடீரென்று மாற்றினல் இந்திய ஜனசமூகத்திற்கு என்ன கேடு சம்பவிக்கும என்று யோசித்துப் பாருங்கள். நமது நடையுடைபாவனைகளை விளக்கிக்காட்ட தேசிய பாஷைகளில் அனேக க்ரந்தங்களிருப்பதனல் நமது எண்ணங்களை தேசஇயற்கைக்குத் தக்கவாறு கொண்டுபோகக்கூடியது

அவைகளையாகையாலும் தேசியபாஷைகளிலேதான் உயர்தரக்கல்வியையும் கற்கவேண்டியது அவசியம். சிவாஜி பெரியமஹானாகக் காரணம் என்ன? தேசியபாஷைகளின் வழியாக நம்தேசத்து மஹா புருஷர்களுடைய சரித்திரங்களை யறிந்ததாலல்லவோ? நாமும் உயர்தரக்கல்வியைத்தேசியபாஷைகளிலேயே கற்பதவசியம். பலகாரணங்களால் நாம் பரதேசபாஷையில் உயர்தரக்கல்வியைப் பெறுகிறோம். அதனால் நமக்குள்ளேற்பட்ட விரும்பத்தகாத மாறுதல்களுக்குப் பாத்திரர்களானோம். பாதி ஜனங்களாகிய ஸ்திரீகள் ஆங்கிலத்தில் உயர்தரக்கல்வி பெறாததனாலேயே இம்மாறுதல்கள் விசேஷமான வேலைசெய்யமுடியவில்லை.

போனது போகட்டும். இனியாவது விழித்துக்கொள்வோம். ஸ்திரீகளுக்காவது தேசக்ஷேமத்தைக் கருதி தேசியபாஷைகளிலேயே உயர்தரக்கல்வி கொடுப்போம். அப்பொழுதுதான் அவர்கள் தேசத்தின் இயற்கையை அறிந்து தேசநன்மைக்காகப் பாடுபடுவார்கள். அப்பொழுதுதான் அவர்கள் தங்களுடைய குறைகளைத் தேசக்ஷேமத்தைக்கருதி நிவர்த்திக்கமுடியும்.

S. V. நாராயணய்யர்.

அதிசய விஷயங்கள்.

1. சாதாரணமாக நாம், குழந்தைகள் இரண்டு மூன்று வருஷ மட்டுமே தாய்ப்பாலுண்பதைப் பார்த்துவருகிறோம். வட துருவத் தினருகேயுள்ள நாடுகளில் வசிக்கும் ஓர் ஜாதியாராகிய எஸ்கிமோ வென்பவர்களின் குழந்தைகள், பதினைந்து பதினாறு வயதுள்ள பாலியர்களாகுமட்டும் அன்னைப்பாலருந்திவருகிறார்கள்.

2. தாமஸ் சுவிக்கர் என்னு மொருவர்க்குக் கைகளிரண்டுமில் லையாம். ஆனாலுமவர் கால்களைக்கொண்டே எழுதுவதும், சித்தி ரம் போடுவதும், சிற்பவேலை செய்வதுமாகிய தொழில்களைச் செய்துவந்தாராம். இவரைப்போலவேயும், இவரைவிட தௌர்ப் பாக்கியம் அதிகரித்தகாரணத்தால், கால்களிலேயும் ஒவ்வொன்றி லும் நான்கு விரல்களையே பெற்றிருந்த லெட்ஜ்வுட் என்பவர், கைக ளில்லாதிருந்தும், கால்களைக்கொண்டே உடைதரித்துக்கொள்வ தும் முகக்ஷவரம் செய்துகொள்வதும் எழுதுவதும் தலையைச் சொரிந்துகொள்வதும் தரையிலிருந்து குண்டூசியைப்போன்ற சிறு பொருள்களை யெடுப்பதும் சிரமமின்றி ஊசியில் நூல் கோப்பதும் துப்பாக்கிக்கு மருந்துபோட்டுச் சுடுவதுமான வேலைகளைச் செய்து வந்தனராம்.

3. ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் எறும்பைத்தின்று ஜீவிப்ப தாகிய எகிட்னு என்னும் ஓர் மிருகம் பக்ஷிகளைப்போல் முட்டையிடு கின்றதாம். முட்டை வெடித்துக் குட்டிகள் வெளிப்பட்டவுடனே அவைகளுக்கு மிருகங்களைப்போலப்பால்தந்து வளர்க்கிறதாம்.

4. உலகத்திலுள்ள மிருகங்களெல்லாவற்றுள்ளும், நாய்தான் முதல்முதல் மனிதனால் பழக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

5. உயிருள்ள பிராணிகளெல்லாவற்றிலும் வெகு தாமதமாக விருத்திபாகும் பிராணியாகிய யானைஜாதியில் பிறந்த யானைகள் ஒன்றேனும் இறக்காமலிருந்தால், 750 வருஷங்களுள், ஆதியிலி

ருந்த ஒரு ஆண் ஒரு பெண் யானைகளிலிருந்து 19,000,000 யானைகள் பூமியின்கண் இருந்து வளர்ந்துகொண்டிருக்குமாம்.

6. சிலந்திப்பூச்சிக்கு 600 முலைக்காம்புகளும், தும்பிக்கு 12,000 கண்களும், கம்பளிப்பூச்சிக்கு 15000 காற்றுப்புகும் துவாரங்களுமிருக்கின்றனவாம்.

7. வட அமெரிக்காவில், பூதத்துவ சாஸ்திரிகள் மலைகளினமைப்பைப்பற்றிச் சோதித்துப்பார்த்து, சில அபூர்வமானமிருகங்கள் முற்காலத்திலிருந்ததாக வெளியிடுகிறார்கள். அவைகளிலொன்று 80 அடி நீளமிருந்திருக்கவேண்டுமென்றும், பின்னங்கால்களால் நடந்துவருமாயின் 30 அடி உயரமிருந்திருக்கவேண்டுமென்றும் தெரிவிக்கிறார்கள். மற்றொன்று தலையிலிருந்து வால் நுனிவரையில் முதுகின்மேல் முக்கோண வடிவமுள்ள தடித்த வளர்ச்சியுடைத்தாயிருந்ததாகவும், இரண்டு மூளைகளை யுடையதாயிருந்ததாகவும், இவ்விரண்டு மூளைகளில் ஒன்று அதன் தலையிலும் மற்றொன்று அரையண்டையுமிருந்ததாகவும், அரையண்டை யிருப்பது அதன் அடிப்பாகம் வால் இவைகளின் வேலைகளை நடத்திக்கொண்டும், தலையிலிருந்தது மற்ற அங்கங்களின் வேலைகளைச்செய்துகொண்டுமிருந்ததாகவும் வெளியிடுகின்றனர்.

R. உமாமஹேச்வரன்.

இந்தியர்களின் உண்மைத்தன்மை.

சகோதரர்களே!

மனிதராய்ப்பிறந்துள்ள நமக்கெல்லாருக்கும் சில குணங்களிருத்தல்வேண்டும். அவற்றுள், பொறுமை மெய்ம்மை தயை பரோபகாரம் கடமையுணர்ச்சி சகோதரபாவம் தேசாபிமானம் முதலியவைகள் மிகவும் முக்கியமானவை. இத்தகைய குணங்களுள் மெய்ம்மையே தலைமையானது. உண்மைத்தன்மை யுண்டாயிருக்குமாயின், அதன் காரியமாக இதரகுணங்களனைத்தும் நம்மிடம் தாமே வந்து குடிகொள்ளும். தன்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமின்றிக் கருமங்களை யியற்றிவருபவனையே மெய்யனென்னலாம். இவனுக்குப் பொறுமையில்லையாயின் மெய்ம்மை இராதென்பது வெகு சுலபமாக விளங்கும். எக்காலத்தும் எவ்விதமான கஷ்டங்களெதிர்ப்படினும் உண்மையையே பேசுவானாயின், அவன் தயை பரோபகாரம் கடமையுணர்ச்சி முதலியவற்றைப் பெற்றவனாகிறான். மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்துவரும்போது, தன்னைச்சுற்றியுள்ள தன் சகோதரர்களுக்கும், வாய்மையுடையவனாகின்றான். இங்ஙனம் மானிடஜாதிக்கே மெய்ம்மையோடு அவன் நடந்துவருகையில், தேசாபிமானம் பூரணமாகப் பெற்றவனாவதற்குச் சந்தேகமேதேனுமுண்டோ?

2. குணங்களில் தலைமை வாய்ந்துள்ள இவ்வுண்மைத்தன்மையாவதென்ன? இதனை அநுசரிக்கும் மார்க்கங்களென்ன? இதனால் நாமடையும் பலன்கள் யாவை? என்று வினவுவோர்க்கு, சிறுவயதுமுதல் அவர்கள் கேட்டுவந்துள்ள பாரதம் ராமாயணம் அரிச்சந்திர புராணம் இவற்றில் தருமன் ராமபிரான் அரிச்சந்திரன் இவர்கள் சத்தியவிரதத்தை அநுசரித்த மார்க்கங்களும் இறுதியிலடைந்த பயன்களுமே போதுமான விடைகளாகும். நாமிப்போது கைக்கொண்டுள்ள விஷயத்துடன் இவைகளையும்பற்றி விவரிப்போமாயின் விஷயம் பெருகுமாதலின், அங்ஙனம் செய்யாதுவிட்டு

நமது சகோதரர்களாகிய இந்தியர்களினது உண்மைத்தன்மையைப் பற்றிச் சற்று கூறுவோம்.

சகோதரர்களே! நமது இந்தியதேசமானது, அரசாட்சிக்காக வேண்டி பற்பல மாகாணங்களாகவும் ஒவ்வொரு மாகாணமும் பல ஜில்லாக்களாகவும் பிரிந்திருக்கிறதென்று நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கலெக்டர்களென்றும் உதவிக் கலெக்டர்களென்றும் இங்கிலாந்து தேசத்தில் நடத்தப் பெற்றுவரும் இந்திய ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையில்தேறிய ஆங்கிலேயர்களையனுப்பி அதிகாரஞ்செலுத்திவருகின்றனர். இவர்களிலநேகர் இந்தியாவுக்கு வரும்போதுதான், இந்தியதேசம் எங்குளதென்று உலகப்படத்தைப்பார்த்து ஓரபிப்பிராயங்கொண்டு புறப்பட்டு வருகின்றனர் என்று நாம் அறியப் பெறுகிறோம். ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷைக்குப் படித்துவருகையில், இந்தியர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால், சில சரித்திரங்களைப் படித்தும் இந்தியாவுக்கு வந்து கொஞ்சகாலம் உத்தியோகத்திலிருந்துதிரும்பி இங்கிலாந்துக்குச்சென்றவரிடம் கேட்டும், அறிந்து கொள்ளுகின்றனர்.

3. நம்மையாள வரப்போகும் ஆங்கிலர்களாகிய இவர்கள் தெரிந்துகொள்ளும் விஷயம் எத்தன்மைத்தது? யாவரெழுதிய இந்தியசரித்திரங்களைப்படிக்கிறார்கள்? அநுபோகம் எவ்வளவுபெற்றவர்களிடம் கேட்டறிகிறார்கள்? என்று சற்று ஆராய்வோம். இவர்கள் தெரிந்துகொள்ளும் விஷயங்களனைத்தும் இந்தியாவிலுள்ளவைகளுக்கு நேர் விரோதமானவை. முதன்மையாக "இந்தியர்கள் கருப்பு மனிதர்கள். அவர்கள் சிநேகத்துக்குத் தகுந்தவர்களல்ல. அன்றியும் அவர்களிடத்தில் மேன்மையான குணங்களொன்றுமே கிடையாது" என்று அபிப்பிராயங்கொண்டு வருகிறார்கள். இவ்விதமான தப்பபிப்பிராயங்கள் கொள்ளக்காரண மென்னவென்றால், இந்தியாவுக்கு வந்து இவ்விடமிருக்கும் ஜனங்களையும் இவர்களது நடை யுடை பாவனை நாகரீகம் குறைநிசயங்கள் முதலியவற்றையும்

ஒன்றையேனும் கண்ணால்காணாது, தங்கள்செவிக்கெட்டிய விஷயங்களைக்கொண்டு, அவ்விஷயங்கள் சரியென்றும் தப்பென்றும் சிறிதும் ஆராய்ந்துபாராது, ஒருகால் நிஜமான விஷயங்கள் கிடைத்தபோதிலும் தாங்கள் கொண்டுள்ள கொள்கைககளுக்கு விரோதமாயிருத்தலால் அவைகளைப்பிசகென்று தள்ளிவிட்டு, ஆலோசிக்காமல் எழுதிவைத்துள்ள மஹான்களது இந்தியசரித்திரங்களை இவர்களுங்குருட்டுத்தனமாகப்படித்தும் வருவதேயாம். உதாரணமாக பேர்போன சரித்திரக்காரரென்று புகழ்பெற்று இந்தியசரித்திரம் எழுதியுள்ள ஒருவர், யாரோ ஒரு இந்தியன் பொய் பேசியதன் காரணமாக இந்தியர்களே பொய்யர்களென்று தீர்மானஞ்செய்து எழுதியிருக்கிறார். கப்பலில் தாம் பிரயாணஞ்செய்கையில் ஓர் பிரஞ்சுதேசத்துக் குழந்தைக்கு ஞானஸ்நானம்செய்துவைத்த ஒரு ஆங்கிலப்பாதிரியார், அக்குழந்தைக்கு மூக்குச்சற்று நீளமாயிருந்தது கண்டு, தான் சாகுமளவும் பிராஞ்சுக்காரர்களுக்கெல்லாம் மூக்கு நீளமென்ற தப்பபிப்பிராயமே கொண்டிருந்த செயல்போலல்லவோ மேலே சொன்ன சரித்திரக்காரர் கொண்ட தீர்மானமிருக்கின்றது. இவ்விதமான சரித்திரங்களைப் படித்தால் எங்ஙனம இந்தியர்களைப்பற்றிச் சரியான அபிப்பிராயம் இவர்களுக்குண்டாகும்? அந்தோ! என்னபேதமை!!

4. இவர்கள் படித்தறியும் சரித்திரங்களின் உண்மைதான் இவ்விதமாயிற்று. இவர்கள் இந்திய விஷயங்களைப்பற்றிக் கேட்டறியும் கனவான்களது அறிவு எத்தன்மையானதென்று பார்ப்போமானால், அது, மேல்சொன்ன சரித்திர விஷயங்களைக்காட்டிலும் கேடாகவே யிருக்கின்றது. கவர்னர்களாகவும் கலெக்டர்களாகவும் வந்து நம்மை ஆள்கிறவர்களில் சிலரே, நமது சகோரர்களாகிய இந்தியர்களின் சரியான குணாதிசயங்களைக் கண்டறிந்து கொள்ளுகின்றனர். அநேகர் தாங்கள் வாசம்செய்யும் பட்டணங்களில் தங்களுக்கெதிர்ப்படும் சிலரது அசேதன குணங்களைக்கண்டு, சில் தப்பபிப்பிராயங்களைமனத்தினிடமாக ஏற்படுத்திக்கொண்டு இவைகளைத்தங்கள் மனதோடுநிறுத்திக்கொள்ளாமல் தங்களைவந்துகேட்டவர்களது மனதை

யும் கெடுத்துவிடுகின்றார்களே. நமது தேசத்தின் பெருமைக்குக் காரணபூதமாயிருப்பவை, கிராமாந்தரங்களிலிருக்கும் குடிஜனங்களும் அவர்களதுமேன்மையான குணாதிசயங்களும் அவர்களதுகட்டுப்பாடுமேயாகும். நமது தேசத்துக்குவரும் ஆங்கில சகோதரர்கள், பெரிய நகரங்களினிடமாக பங்களாக்களில் ஊருக்கு வெளியே வெகுதூரத்தில் ஜனங்களோடு கலவாது வசித்துவருவார்களானால் நமது சகோதர இந்தியர்களின் குணாதிசயங்கள் எவ்வாறு அவர்களுக்கு விளங்கும்? கோல்ட்ஸ்மித் (Goldsmith) என்னும் ஆங்கிலக் கவிராயர் பாடியுள்ள குடித்தனஜங்களின் மேன்மையைச் சற்று கவனித்து இந்தஆங்கிலர்கள் குடிஜனங்களோடு சாதாரணமாகக் கலந்து அவர்களுக்கு சகோதரபாவத்தைக் காட்டிவருவார்களாயின், இந்தியர்களின் தன்மையைச்சரிவரத் தெரிந்து கொள்ளலாமே. இவ்விதம் பேதம் என்பது சிறிதுமில்லாமல் கலந்து இந்தியர்களின் நிஜமான குணங்களைக் கண்டறிந்து தமது சகோதரர்க்கு ஒருவர் தெரிவிப்பாரானால் அவர்களுக்குச் சில அவமரியாதையான பட்டங்களே கிடைக்கின்றன. இத்தகைய மனதோடு நம்மையாள வரும் ஆங்கில துரைமார்களது நிலை என்ன பரிதாபகரமானதென்று பாருங்கள்.

5. இவர்களது மனோபாவம் இவ்விதமிருக்க நமது சகோதரர்களாகிய இந்தியர்களது உண்மைத்தன்மை எப்படியிருக்கிறதென்று பார்ப்போம். வேதங்கள் ஆதியாக உபநிஷத்துகள் புராணங்கள் ராமாயணம் பாரதம் பாகவதம் முதலியவெல்லாம் நமது உண்மைத் தன்மைக்கு சாக்ஷியங்களாக விருக்கின்றன. இவைகளையும் தள்ளிவிட்டு ஆதிகாலமுதல் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த அயல் தேயத்தார்களது சாக்ஷியங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போமானால் இந்தியர்களின் உண்மைத்தன்மை தானாகவே பிரகாசிக்கின்றதே. கிரேக்கதேசத்திலிருந்து இந்தியாவின்மேல் படையெடுத்து வந்த அரசர்களோடு இங்குவந்த வித்யார்த்திகளில் க்டீஸியஸ் (Ktesias) என்னும் வைத்ய நிபுணரும், ஏரியன் (Arrian) என்னும் சாஸ்திரநிபுணரும், சந்த்ரகுப்தமகாராஜனது அரசாட்சியில் ராஜதூத

ராக வந்த மெகாஸ்தினீஸ் (Magosthenes) என்பவரும், ஆகிய இவர்களெல்லாரும் நமது முன்னோர்களின் உண்மைத்தன்மையைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீனயாத்திரிகளில் ஒருவராகிய ஹ்யூன்த்ஸாங் (Hiounthsang) என்பவரும், பதினோறும் நூற்றாண்டில் நமதுதேயத்தின்மீது படையெடுத்துவந்த மகம்மதியர்களோடு வந்த இதிரிசி (Idrisi) என்பவரும், பதின்மூன்றும் நூற்றான்டில் உலகயாத்திரை செய்துவந்த மார்கோபோலோ (Morcopolo) என்பவரும் ஆகிய இவர்களும் நமது முன்னோர்களின் உண்மைத்தன்மையை வெகுவாக மேன்மைப்படுத்தி எழுதியிருக்கிறார்களே.

6. சகோதரர்களே!! இவர்களெல்லாரும் அயல்தேசத்தவர்கள். இவர்கள் சொல்வது எவ்வளவு மட்டில் வாஸ்தவமென்பதைக் கண்டறியக் கண்களில்லாவிட்டாலும், அவர்களது (நம்மையாள வருபவர்களது) முன்னோர்களும் சகோதரர்களுமாகிய ஆங்கிலேயர்களே நமது உண்மைத் தன்மையைப்பற்றிப் பெருமைப்படுத்தி எழுதியுள்ளவைகளையாவது சற்றுக்கண் திறந்து பார்க்கலாகாதா? வங்காளத்தில் முதல் முதல் கவர்னராகவிருந்து பிற்பாடு இந்திய கவர்னர் ஜெனராலாக நியமிக்கப்பட்ட வாரன்ஹேஸ்டிங்ஸ் (Warrenhastings) என்னும் பிரபு "இந்தியர்கள் சாந்தமும் நற்குணமும் நிறைந்தவர்கள். உலகத்திலுள்ள ஜனங்களெல்லாரைக் காட்டிலும் இந்தியர்களே நன்றியறிவுமிக்கவர்கள். பழிவாங்கலென்னும் குணம் அவர்களிடத்தில் கிடையவே கிடையாது. அன்றியும் ராஜபக்தியும் ராஜாங்கத்துக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும் இந்தியர்களிடமே உண்டு" என்று எழுதியிருக்கிறார். சென்னைக் கவர்னராகவிருந்த சர்தாமஸ் மன்றோ (Sir Thomas Muuro) என்னும் மஹான் "தயாளகுணமும் பரோபகாரசிந்தையும் ஸ்திரீகளை சமமாகப்பாவித்தலும் கைத்தொழில்களில் சாமர்த்தியமும் சிறந்த விவசாயவகைகளும் உயர்ந்த நாகரீக சின்னங்களல்லவா? நாகரீகம் என்பது ஓர் வர்த்தகம் செய்யக்கூடிய பொருளாயின் ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்துகொள்வதில் அதிகலாபமடைவார்கள் என்

பது எனது கொள்கை" என்று எழுதியிருக்கிறார். சர்ஜான்மால்கம் (Sir John Malcoem) என்னும் மகிபர் "இந்தியர்கள் பொய் பேசுவதில்லையென்று நான் தீர்மானமாகச் சொல்வேன்" என்று எழுதியிருக்கிறார். இவ்விதமாக நமது சகோதரர்களது உண்மைத்தன்மையைப்பற்றி அநுபோக சித்தாந்தமாக எழுதிவைத்திருப்பது மாத்திரமின்றி இந்தியாவை விட்டுத்தமதுதேசமாகிய இங்கிலாந்துக்குச் சென்றபோது தங்களதுதேசத்திலுள்ள ஜனங்களின் கெட்ட குணங்களைச் சகிக்கமுடியாமல் இந்தியர்களை விட்டுப் பிரிந்துபோனதற்காக மிகவும் வருத்தமடைந்ததாகவும் எழுதியிருக்கின்றார்களே. இவைகளின் உண்மையையேனும் சற்றுக்கவனித்திருப்பார்களாயின் இந்தியர்கள் பொய்யர்களென்னும் தப்பான அபிப்பிராயங்கொள்ள இடமிராதல்லவா? நமது தேசசரித்திரம் எழுதியுள்ள வில்சன் என்னும் பண்டிதர் "நம்தேசத்தில் தீயகுணங்களோடு கூடியஜனங்களைப்போல இந்தியர்களில் காணமுடியாது. இங்கிலாந்தில் 10000ல் ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் வங்காளத்தில் 1000,000ல் ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார். இந்தியர்கள் பொய் பேசுபவர்களாக இருந்தால் அவர் இம்மாதிரி எழுதுவாரா?

7. சகோதரர்களே! இவ்விதமாக நமது உண்மைத்தன்மையானது அயல்தேயத்தார்களாலும் ஆங்கிலேயர்களாலும் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றது. எல்லாத்தேசத்திலும் நெல்லில் பதரிருப்பதுபோல நல்லவர்கள் பலரிருந்தால் தீயகுணமுள்ளவர்கள் ஒன்று அல்லது இரண்டுபேர் இல்லாமலிருப்பார்களா? அப்படி இருப்பவர்களைக்கொண்டு ஒருதேசத்திலிருப்பவர்கள் எல்லாரும் கெட்டவர்கள் என்று தீர்மானித்துவிடுவது எவ்வளவு புத்தியீனம். இதுகாறும் நம்மையாளவந்த ஆங்கிலேயதுரைமார்களில் சிலர் மட்டுமே நமது சகோதர இந்தியர்களையும் அவர்களது குணாதிசயங்களையும் செவ்வனே தெரிந்துகொண்டு தங்களால் கூடிய நன்மையைப் பயந்து வந்தனர். எவனாயினுமொருவன் ஓர் தப்பிதத்தைச் செய்துவிடுவானாயின் அந்த ஒரு தப்பிதத்திற்காக அவனை வெறுக்கிறார்களே.

அவனிடத்துள்ள எண்ணிறந்த நல்லகுணங்களைச்சற்றேனும் கவனியாமல் தள்ளிவிடுகின்றார்களே. பிரஜைகளிடத்து அன்பு என்பதை வைத்து ஒவ்வொருகாரியத்திலும் அவ்வன்பைக் காட்டிவந்தாலன்றோ இருதிறத்தாருக்கும் நன்மையுண்டாகும். இனியேனும் நமது சகோதரர்களாகிய இந்தியர்களிடத்து உண்மைத்தன்மை உண்டென்றுணர்ந்து நலந்தந்துவருவார்களென்று நம்புகிறோம்.

R. உமாமஹேச்வரன்.

ஸ்ரீ கம்பராமாயணம்.

“தமிழுக்குக் கதியாவர் கம்பரும் திருவள்ளுவருமே என்னும், இந்த உண்மையை “கதி” என்னும்சொல்லின் இரண்டெழுத்துக்களில் “க” என்பது கம்பரையும் “தி” என்பது திருவள்ளுவரையும் உணர்த்துகின்றன” வென்னும் தமதபிப்பிராயத்தைச் சென்னைப் பச்சையப்பன்காலேஜ் தமிழுபந்யாஸகர் ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் M. A. அவர்கள் தமது அருமைப் பிரசுரங்களில்வெளியிட்டுள்ளார்.

இஃது அவர் தமது புத்திசாதுரியத்தினால் ஒருகுறிப்பாக அழகமையப் பொருத்தினார் என்று பலர் கொள்ளினும் அச்சொல் தெய்வவாக்காகவே அவர் வாக்கினின்றும் பிறந்தது என்பதே எமது கொள்கை. இதனையே பிறதமிழரும் ஒப்புக்கொள்ளத் தட்டிராதெனத் துணிகிறேன்.

ஏனெனில், உலகின்மாந்தர் நன்னடைபெற்று ஒழுகவேண்டிய தன்மையைக் காண்பிப்பாராகப், பெரியார், அவற்றின் பயனுன அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையுமே வற்புறுத்தியுள்ளார் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக் கிடந்ததொரு உண்மை.

அந்நால்வகைப்பயன்களையும் உயிர்கட்கு உணர்த்தும்பொருட்டு பலமேதாவிகள், தத்தம் அரிய நூல்களில், அப்பயன்களையடையும் சரியான மார்க்கங்களைக் காட்டியுள்ளனர். இஃது அனைவரும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. அவர்களுள்ளும் தெய்வத்தன்மைவாய்ந்த இவ்விரு புலவருமே, இக்காலத்துக்கேற்ற நடை யுடை பாவனைகளைச் செவ்வனே பசுமரத்தாணியெனத் தெரிவித்துள்ளார் என்பது ஒப்புக்கொள்ளக் கிடக்கிறது. என்னை? திருவள்ளுவர், முதன் மூன்று பயன்களாகிய அறம் பொருள் இன்பம் என்பவற்றையடைய வேண்டிய வழிகளைத் தமிழ் வேதமெனக் கூறப்படும் தமதருமைத் திருக்குறள் நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களால் பரக்க உணர்த்தியுள்ளார் என்பதும், அத்திருக்குறள் நூலுக்கு உரை தந்தருளிய பதின்மருள்ளும் சிறந்த பரிமேலழகியார் அந்த 1330 செய்யுட்களையும் 133 அதிகாரங்களாக அழகு பெறப் பாகுபடுத்தினர் என்பதும் பெறப்படுகிறது. ஒவ்வொரு அதிகாரத்தினையும் நாம் ஆராய்ச்சியுடன் படிக்கும்போது, அதன் ஆசிரியர், எடுத்துக்கொண்ட கருத்தினை உடன்பாடு எதிர்மறை முறைகளாகப் பப்பத்து செய்யுட்களால் வற்புறுத்துகிறார்என்பதும் பெறக்கிடக்கிறது.

எனவே, ஆசிரியர் திருவள்ளுவர், அறம் பொருள் இன்பம் என்னும் முப்பயன்களையும் படிப்போர்க்குக் கைக்கனியாகும்படி உதாரண முகத்தானும் நீதிமுகத்தானும் விளங்கக் காட்டியுள்ளார் என்பதையும் உறுதியாகக் கொள்கிறோம்.

இந்தக்குறளாசிரியர் திருவள்ளுவரது பெருமையைப்பற்றிக் கல்வியிற்சிறந்த பலர் பலசமயங்களில் பல பத்திரிகைகள் வாயிலாக உபந்யஸித்திருக்கிறார்கள். ஆதலானும், நாம் இன்று எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு இஃது ஒருபுடையான ஆதாரமாத்திரை

யாகக் கொள்ளப்பட்டதாதலாலும் இதனைப்பற்றி விரிக்காது மேற் செல்லக்கடமையாயிற்று. என்றாலும் இவரது பெருமையைப்பற்றிய எமது அபிப்பிராயத்தையும் இதேபத்திரிகையில் பின்னொருமுறைப் பிரசுரிப்போம் என்பதையும் எமது மித்திரநேயர்களுக்கு வணக்கத் தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, இச்சுருங்கக் கூறுமுகத்தான், நங்குறளாசிரியர் பயன் நான்கனுள் இலக்கணவகை யானெடுத்துக் கூறப்படாத வீடு பேற்றினை விடுத்து, ஏனைய மூன்றனையும் வகைப்படுத்தி அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவற்றால் கூறியுள்ளார் என் பது, பரிமேலழகியார் வாக்கினால் அடையப்பெற்றோம்.

நமது கம்பநாட்டாழ்வாரோ, தமதருமைக் கல்வித்திறத்தாலும் தெய்வவழிபாட்டாலும் உயிர்கள்பால் தயையுண்மையாலும் தங் காலத்து ஆசாரங்களையும் முற்காலத்து ஆசாரங்களையும் சீர் பெற அறிந்துள்ள சீர்த்தியாலும் மற்றும் உள்ள நற்பழக்கத்தாலும் தாம் தெரிந்துள்ள இம்மை முதலிய மும்மைப்பயன்களையும் அவற்றிற் கேற்ற இயல்புகளையும் உதாரணமுகத்தானும் சாஸ்திரவாராய்ச்சி முகத்தானும் ஒரு தர்மசாஸ்திர ரூபமாக வெளிப்படுத்த வெண்ணி னார். எனினும், அஃது ஒரு கதாரூபமாக இல்லாவிடின், சாதாரண மனிதருக்கு ஏற்றுக்கொள்ள இயலாது என்பதனையுணர்ந்து, பல நீதிகட்கும் தர்மங்கட்கும் ஒழுக்கங்கட்கும் ஆதாரமான ஸ்ரீராமாவ தாரக்கதையினையே தமக்கு ஒரு உதாரணமாகக் கொண்டனர் போலும்.

அந்தச் சரித்திரத்தினைத் தாங்கூறற்கு ஆதாரமாக வான்மீகத் தினையும், தற்காலத்துக்கேற்றபடி அந்தக்கதையினை மாற்றிக்கொள் ளநேர்ந்தபடியால் அதற்கேற்ப வசிஷ்டர் போதாயனர் முதலிய மற்றவர் செய்திருக்கும் ராமாயண சரித்திரத்தினையும், அந்தக்கதை யின் இடையிடையே தாம் குறிக்கும் எண்ணங்களாகிய தர்மம் நீதி முதலியவற்றிற்கு ஆதாரமாகத் திருக்குறணூலையும், மற்றும் பல ஆரிய நீதிசாஸ்திரங்களையும், தெய்வவுண்மையையும் தெய்வவழி

பாட்டையும் குறிப்பதற்கு ஆதாரமாக திருவாய்மொழி தேவாரம் முதலிய பக்தர்களது வாய்மொழிகளையும், சிங்காரம் முதலிய ரஸ பாவங்களைச் சொல்வதற்கு ஆதாரங்களாக இறையனர் அகப்பொருள் முதலிய அகப்பொருள் நூல்களையும், காவ்யங்கட்கு இன்றியமையாத வர்ணனைகளைக் கூறுவான் ஆதாரங்களாக சிந்தாமணி முதலிய சங்க நூல்களையும், உயர்ந்த தர்மவொழுக்கங்களையும் பாமரரும் தெள்ளிதின் உணர்ந்து கொள்ளும்பொருட்டு அவற்றிற்கு ஆதாரங்களாக உலகவழக்குகளையும் பழமொழிகளையும்; யுத்த விஷயத்தைச் சொல்லும்போழ்து ஆதாரமாகப் புறப்பொருள் வெண்பாமாலையையும், இன்னும் அக்காலத்தளவு உலகம் விருத்தியடைந்திருந்த எல்லா அறிவையும் கூறுவதற்கு ஆதாரங்கங்களாகப் பழைய சாஸ்திரங்களையுமே முக்ய ஆதாரங்களாகக் கொண்டு அவற்றை இக்காலத்திற்கேற்ப தமது சதுரபுத்தியால் திருத்திக்கொண்டும் செம்பொன்னில் அரியமணிகளைவைத்து இழைப்பதுபோல் அமிழ்தினும் இனிய நந்தமிழ்மொழியில் தமிழுக்குரிய எவ்வகையிலக்கணங்களினும்மாறுபடாது அழகுபெறக்கூறியுள்ளாரென்பது அவரது இராமாயணத்தை ஆராய்ச்சிசெய்யும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளக்கிடக்கிறது.

எனவே இதுவரையும் கூறிவந்த இத்திறத்தான், பண்டிதர் செல்வகேசவராய முதலியாரவர்கள் தெய்வவாக்கெனக்கூறிய கதி என்னும்சொல்லின் பொருட்படி, தமிழுக்குக் கம்பரும் திருவள்ளுவருமே கதியாயினரென்பது உறுதிப்பாடடைந்தது. அவரிருவருள்ளும் மூன்று பயன்களையே கூறிய திருவள்ளுவரினும், அம்மூன்றனோடு ஏனைய ஒரு பயனையும் பல சாட்சிகளால் வற்புறுத்திக்கூறிப், பயன் நான்கினையும் மும்மையியல்பினையும் முற்றுப்படுத்திக் கூறிய ஸ்ரீ கம்பநாட்டாழ்வாரது சீர்மை தோன்ற முதற்கண் ககரம் (க) அரசெனவீற்றிருப்பதும் அழகுடைத்தெனவும் கொள்ளப்பெறுகிறோம்.

பத்திராதிபர்.